Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி 04 | புதன்கிழமை (20.07.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 213

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்

## சமாதான ஒருங்கிணைப்பு நாடுகள் கோரிக்கை

(நமது நிருபர்)

அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதமற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு நிலைபரம் குறித்தும் உத்தேச சமாதான திட்டங்கள் தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றியம் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நோர்வே என்பன தமது அச்சத்தை வெளியிட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்திற்கு படையினர் தடை

(மட்டக்களப்பு)

கிரான் புலிப்பாய்ந்தகல் பாலம் ஊடாக பிற்பகல் 5.30மணிக்கு பின் போக்குவரத்துச்செய்வதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர். இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் இவ்வாறு படையினர் தடை விதித்துள்ளனர். தினமும் காலை 7 மணிக்கு பின்பே போக்குவரத்திற்கு மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது சிறுபோக அறுவடைகள் நடைபெற்று சூடு அடிப்பு நடைபெற்று வரும் நிலையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசிற்கு இ.தொ.கா. தொடர்ந்து ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப்பொறுப்பை வகிக்கும்வரை அவருக்கு முழுமையான ஆதரவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வழங்கும் என்று அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ஆட்சியில் இருக்கும் வரை இ.தொ.கா அவருக்கு முழுமையான ஆதரவை வழங்கும். அரசின் செயற்பாடுகளுக்கு பாராளுமன்றத்திற்குள்ளும் தமது கட்சி முழு ஒத்துழைப்பினை வழங்குமென இ.தொ.கா. தலைவர் இச்சந்திப்பின்போது உறுதி (12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று கிளிநொச்சி விஜயம்

### சமகால நிலைபரம் குறித்து பேச்சு

(கிளிநொச்சி)

நோர்வேயின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் ஒட்வர் லக்ரட், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருவ் ஹொக்லண்ட் ஆகியோர் இன்று கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

கிளிநொச்சிக்குச் செல்லும் அவர்கள் முற்பகல் 11மணிக்கு தமிழீழ அரசியல்

போர்நிறுத்த உடன்பாட்டின் தற்போதைய நிலை, பொதுக்கட்டமைப்பின் சிலசரத்துக்களிற்கு உயர்.நீதிமன்றம் இடைக்காலதடை பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் மற்றும் போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக் குறித்த அரசின் இறுதி முடிபு என்பன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டிலிருந்து முன்னாள் அமைச்சர் எஸ்.பி. விடுதலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இலஞ்ச வழக்கில் இருந்து அவரை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவ் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேல் நீதிமன்ற நீதிபதி ரோகினி பெரேரா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

200 இலட்ச ரூபா பெறுமதியான சொத்

விதந்துரைக்கு அமைய இவ் வழக்கை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் எஸ்.பி.திஸாநாயக்க நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டார். அவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை என்று அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி விசாரணைகளின் போது நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

கிளிநொச்சிக்குச் செல்லும் அவர்கள் முற்பகல் 11மணிக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னை விடுதலைப்புலிகளின் சமாதான செய லகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள் ளனர்.

இறுதி முடிபு என்பன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளினால் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கான பதிலும் இன்றைய சந்திப் பில் விளக்கப்படவுள்ளது. (ச-4)

இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

290 இலட்ச ரூபா பெறுமதியான சொத் துக்களை சட்டவிரோதமாக சேர்த்துள்ளார் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் சட்ட மூலத்தின் 21ஆவது

விசாரணைகளின் போது நீதிபதியின் கவ னத்திற்கு கொண்டுவந்தார்.

இதன் பிரகாரம் அவர் மீதான குற்றச் சாட்டுக்கள் உரிய வகையில் நிரூபிக்கப்படா மையால (12ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி பதவியேற்றமைக்கு சான்றுகள் எவையும் இல்லை

## தொடர்ந்து பதவி வகிக்க முடியாது என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2000ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தமைக்கான எந்த வொரு சாட்சியங்களும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத்தெரிவித்தார். ஜனா திபதி பதவிக்காக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டால் அது தொடர்பாக அரசாங்க வர்த்தகமானியில் வெளியிடப் பட்டிருக்கவேண்டும்.

ஆனால் ஜனாதிபதி 2000ஆம் ஆண்டில் பதவிப்பிர மாணம் செய்தமைக்கான வர்த்தகமானி அறிவித்தல் எது வும் வெளியிட்டிருக்க (12ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை புலனாய்வுத்துறை அதிகாரி இராணுவத்தளபதியால் இடமாற்றம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட 22-வது படைத் தலைமையக புலனாய்வுத்துறை அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

இராணுவத்தளபதி சாந்தகொட்டே கொடவின் உத்தரவிற்கு அமையவே இவர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வாரம் திருகோணமலையில் விடுதலைப்புலிகள் மீது மேற் கொள் ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாகவே அவர் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இதேவேளை இராணுவப் புலனாய்வுத்துறை அதிகா ரிகள் மற்றும் சிப்பாய்களின் புலனாய்வு நடவடிக்கைகளை இடை நிறுத்திவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ள தாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-4)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கோரி ஐ.தே.கட்சி கையெழுத்து வேட்டை

## அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப் படவேண்டுமென வலியுறுத்தி ஐக்கியதேசியக் கட்சி பொதுமக்களிடம் கையெழுத்துக்களை சேகரிக்கவுள்ளது.

அரசியல் அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உரிமைகளை பாதுகாப்பதற்காக இவ்வருடத்திற் குள் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டுமென வலி யுறுத்தி வீடு வீடாகச்சென்று கையெழுத்துப் பெறும் நடவடிக் கைகளை அடுத்தமாதம் முதல்வராத்தில் இருந்து ஆரம் பிக்க ஐக்கியதேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கியதேசியக்கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் வீடு வீடாகச்சென்று கையெழுத்துக்களைப் பெறுவதுடன் காரி யாலயங்களுக்கும் செல்லவுள்ளனர். நாட்டில் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் இக்கையெழுத்து வேட்டை (12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# முதலீடுகளை மேற்கொள்ளும் சர்வதேச சமூகத்தினர் தவறான எண்ணங்களை மாற்றவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் சர்வதேச சமூகத்தினர் இலங்கை அரசாங்கம் குறித்த தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுர பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையில் கூடுதலான முதலீடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பிய போது ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு மிகக் கூடுதலான முதலீட்டாளர்களை அழைப்பதே தமது மலேசிய விஜயத்திற்கான முக்கிய நோக்கம் என்று கூறிய அமைச்சர் அதன் பலாபலன்களை 6 மாத காலத்திற்குள் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நிலவும் தவறான கருத்துக்களை நிவிர்த்தி செய்யும் பட்சத்தில் சிங்கப்பூரில் இருந்து அதிகளவான முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என்றும்,

இதுவரை காலமும் இலங்கைக்கு சுற்றுலாத்துறை சார்ந்தவர்களே வருகைதந்ததாகவும் ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களை இல்ங்கைக்கு அழைத்து வர முயற்சித்து வருவதாகவும் அமைச்சர் அனுரபண்டாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# கிளி.இல் வட-கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டு நிறுவகம்

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டு நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு கல்விக் கழகத்தலைவர் வணபிதா பிரான்சிஸ் சேவியர் அடிகளார் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். இவ் நிறுவகத்தின் பெயர்ப்பலகையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இவ் வடக்கு கிழக்கு கல்வி மேம்பாட்டு நிறுவகத்தை வடக்கு கிழககு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

மேலும் இந்நிகழவில் அறிமுக உரையை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆற்றினார். "தமிழரின் இன்றைய கல்வி நிலை" தொடர்பாக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் ரி.இளங்குமரன் உரையாற்றினார்.

பின்னர் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் உருவப்படத்திற்கு முன்னாள் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை மலர்மாலை அணிவித்தார். மேலும் இந்நிகழ்வில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் மகாசிவம், விரிவுரையாளர்கள், கல்வியதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-19)

# கண்காணிப்புக்குழு-புலிகள் வவுனியாவில் சந்திப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் முக்கிய இடங்களில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதுடன், கனரக வாகனங்களின் நடமாட்டமும் படையினரது சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தமொன்று ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றியிருப்பதாக யுத்த நிறுத்தக் கணகாணிப்புக்குழுவிடம் வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரிவினருக்கும், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே மேற்படி விடயத்தை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

அத் துடன் விடுதலைப் புலிகளின தலைமை யுத்த நிறுத்த ஒப்பநதத்தை முழுமையாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதைனையும் யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினருக்கு அவர் தெரிவித்தார். (இ-4)

# பாராளுமன்றம் கலையாது ஜனாதிபதி சந்திரிகா உறுதி

ஐக்கியதேசியக்கட்சி தொடர்ந்தும் பகற்கனவு கண்டுவருகின்றது. ஜனாதிபதி தேர்தல் உரிய காலதகில் நடைபெறும். அதற்கு போதிய காலம் இருக்கிறது. அரசாங்கம் தனது பாராளுமன்ற ஆயுட்காலத்தை பூர்த்திசெய்தபின்பே பொதுத்தேர்தலும் நடைபெறும். பாராளுமன்றத்தை கலைக்கும் திட்டம் எனக்கில்லை. வேறு எவருக்கும் அதனைக் கலைக்கும் அதிகாரமும் கிடையாது. இன்னும் எட்டு மாதங்களில் நடைபெறவிருப்பது உள்ளூராட்சித் தேர்தல்தான். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 'துருவில' என்னுமிடத்தில் நீரை சுத்திகரிக்கும் ஆலையொன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் தெரிவீத்தார்.

அவர் மேலும் பேசுகையில், பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் எழக்கூடிய எந்தவொரு பிரச்சினையையும் சமாளிக்குமளவுக்கு என்னிடம் பலம்வாய்ந்த அரசாங்கம் இருக்கின்றது. இதுவே நிரந்தர சமாதானத்திற்கு இட்டுச்செல்லும்படியாகும். எமது நாட்டு மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர். அதனை ஏற்படுத்திக்கொடுப்பது எனது கடமை. பொதுக்கட்டமைப்புத் தொடாபில் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டிய விதத்தில் தேவையான மாற்றங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளும். சுனாமி பல வேலைத்திட்டங்களைத் தாமதப்படுத்தியிருந்தது. இப்பொழுது எம்மிடம் தேவையான நிதிகள் இருப்பதால் அடுத்தவருடத்திலிருந்து அவற்றை அமுல் செய்வோம்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பானது முழுப் பொதுக்கட்டமைப்பினையுமே செயலற்றதாக ஆக்கவில்லை. ஏற்கனவே அவ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களையே சில மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. ஆனால தனியாா ஊடகங்கள் தவறான தகவல்களை மக்களுக்கு வழங்கி வருகின்றன. எனினும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய விதத்தில் தேவையான மாறறங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்.

ஆட்சியிலுள்ள எனது அரசாங்கத்தை அவ்வளவு சுலபமாக வீழ்த்திவிடமுடியாது. பாராளுமன்றத்தில்



இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிககை மட்டும் அரசாஙகம் ஆகாது.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுனாமி நிவாரண சபையில் தமிழ் மக்களுக்கு நன்மைகள கொடுப்பதற்கு எதிர்ப்பினைத் தெரிவிதது அரசைவிட்டு வெளியேறிவிட்டனர். நான் அவர்களைப் போகச் சொல்லவில்லை. முடிந்த வரை இருங்கள் என்று தெரிவித்திருந்தேன்.

பொறுப்பில்லாமல் மக்களுக்கொன்றை சொல்லிவிட்டு வேறு ஒன்றை பொறுப்பின்றி செய்பவர்கள்பற்றி இதற்குமேல் சொல்வதில்லை.முடியாதுஎன்று ஜே.வி.பி.யினா போய்விட்டனர். ஆனால் அவாகளுக்குப்பின்னால் கும்பிட்டுக் கொண்டு ஓடுவதற்கு எமக்கு நேரமில்லை.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின எண்ணிக்கை குறைந்தாலும் ஜே.வி.பி.யினர் வெளியே போனதன் பின்னர், எனக்கு நாட்டு மக்களின் ஆணை இன்னமும் இருக்கின்றது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-4,6)

# இராசி பலன்

**20.07.2005**
**(ஆடி 4, புதன்கிழமை)**
**சதுர்த்தி முன்னிரவு 7.59 வரை**
**பூராடம் பின்னிரவு 4.14 வரை**
**இராகுகாலம் 12.01-1.31 வரை**
**சுபநேரம் -4.31-6.01 வரை**
**முதலாம் ஆடிச்செவ்வாய்**

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், கட்டுப்பாடு. |
| இடபம் | மனக்கவலை, பொருள்விரயம், வாகன பயம், காரிய தாமதம். |
| மிதுனம் | மனோதைரியம், குடும்பமகிழ்ச்சி, தெய்வ சிந்தை, நல்ல காரியம். |
| கடகம் | மனமகிழ்ச்சி, 'நோய் குணமடைதல், புதிய முயற்சி பகைவர்நேசம். |
| சிங்கம் | பணக்குறைவு, காரியதாமதம், புத்திரரால் கவலை, பூர்வபுண்ணிய கருமம். |
| கன்னி | தனவிரயம், புதிய திருப்பம், தாய்வழி உறவு, மனச்சஞ்சலம். |
| துலாம் | வாக்குமேன்மை, மனோதைரியம், காரிய அனுகூலம், சகோதரர் உதவி. |
| விருச்சிகம் | விவாதம், அமைதிக்குறைவு, காரிய தாமதம், ரோகநிலை. |
| தனுசு | வெகுமானம், மாதர்நட்பு, புதிய முயற்சி, தெளிந்த சிந்தை. |
| மகரம் | உஷ்ண வியாதி, வீண் அலைச்சல், தொழில்சிந்தை, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, காரிய அனுகூலம், சயனசுகம். |
| மீனம் | பெரியோரால் மதிக்கப்படுதல், எடுத்தகாரியம் கைகூடும், போசன நன்மை, நல்ல செய்தி |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# அரச சேவைகுறித்து அதிருப்தி கொள்கிறார் சமுர்த்தி அமைச்சர்

(கொழும்பு)

அரச சேவையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் எதிர்கொளளும் அனுபவங்கள் மிகக் கவலைக்குரியது என சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அரச நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்வோரை உபசரிக்கும் முறை தொடர்பாகத் திருப்தியடைய முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்காக கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அரச சேவையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் எதிர்கொளளும் அனுபவங்கள் மிகக் கவலைக் குரியது.

அத்துடன் சில அரச அதிகாரிகள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெயவதற்கு பல நாட்கள் இழுத்தப்புச்செய்வதாகக் குறிப்பிட்ட அவா், புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகள் நேர்மையாகச் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (க-2)

# வெடிபொருட்களுடன் கைதான 7 பேருக்கும் 29வரை விளக்கமறியல்

(மன்னார்)

கிளைமோர் வெடிபொருள்களுடன் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 7 பேரை மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் பலத்த பாதுகாப்புடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டு விசேட நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகிய விடத்தல் தீவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட இரு படகுகளிலிருந்து தலா 8 கிலோ நிறையுடைய 16 கிளைமோர் குண்டுகளையும், அதற்குரிய வெடிக் கவைக்கும் கருவியும், வயர்கள் மற்றும் மூன்று கையடக்கத் தொலை பேசிகள் என்பனவும் சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் 90% சரத்துக்களுக்கு பாதிப்பில்லை

## ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி நிவாரணசபை உடன் படிக்கையில் 90சதவீதமான சரத்துக்கள் உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்படவில்லையென்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சரத்துக்களை அமுல் செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆதரவினை வழங்குவர் எனவும் நேற்றுமுன்தினம் ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீாமானத்தை மதிக்கும் அதேவேளையில், அரசாங்கம் சுனாமி நிவாரணசபை உடன்படிக்கையினை அமுல்செய்யும் கடைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது.

இதில் ஜனாதிப்தி முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கின்றாா். எனவே, அவர் இகில் வெற்றிகண்டு விடுவார் என ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ற-4)

# துப்பாக்கிச் சூடு சிப்பாய் படுகாயம்

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் நண்பகல் 12.45மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எஸ்.எம்.திஎைபால (வயது 37) என்ற இராணுவ சிப்பாய் படுகாயடைந்ததுள்ளார்.

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது மறைந்திருந்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இடது கையில் காயமடைந்துள்ள எஸ.எம்.திஎைபால பொலநறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-4)

### அரசியலமைப்புச் சபைக்கு

## புதிய உறுப்பினர் நியமிக்கப்படாமை; பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன

அரசியலமைப்புச்சபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் படாமையினால் பல சிக்கல்கள் எழுந்திருப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குற்றச்செயல்கள் அதிகரிப்பு, நீதிமன்ற முறையில் காணப்படும் பலவீனம் என்பன இவற்றில் காணப் படும் பிரதான பிரச்சினைகளாகும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலா ளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ அதிகாரத்து டன்கூடிய அரசியலமைப்புச்சபை உறுப்பினர்களைத் தவிர ஏனைய உத்தியோகபூர்வமற்ற பிரதிநிதி களின் பதவிக்காலம் மூன்றுவரு டங்களாகும்.

இதற்கமைய பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் உறுப்பி னர்கள் நியமிக்கப்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ந-4)

## பாடசாலை மாணவர்களுக்கான மத்தியஸ்தம் விசேட செயல்திட்டம் அறிமுகமாகும்

(கொழும்பு)

மத்தியஸ்தர் தொடர்பாக பாட சாலைமாணவர்களுக்கு அறிவூட் டும் விசேட செயற்றிட்டம் ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்தப்பட வுள்ளதாக நீதியமைச்சர் டி.டபிள்யு. ஜே.செனவிரத்ன தெரிவித்துள் ளார்.

இதனடிப்படையில் உயர்தர மாணவர்களைக்கொண்டு பாட சாலை மத்தியஸ்தர் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் பாடசாலையில் மோதல்கள் பிரச்சினைகளற்ற சிறந்த சூழலை உருவாக்க முடி யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோல் எதிர்காலத்திலும் மத் தியஸ்த பிரதான சபைகளை நிரந் தர இடங்களில் ஸ்தாபிக்க நடவ டிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக அரச நிர்வாக அமைச்சுடன் கலந்துரையாடி பிர தேச செயலாளர் அலுவலகங்க ளில் மத்தியஸ்த சபைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

தற்பொழுது வடக்கு-கிழக்கு உட்பட 276இடங்களில் பிரதான மத்தியஸ்தசபைகள் இயங்கி வரு கின்றன. வர்த்தகப் பிரச்சினைகள், தொழிலாளர் காப்புறுதி, விவாகப் பிரச்சினைகள் போன்றவை இதன் மூலம் தீர்க்கப்படுகின்றன என்றும் அமைச்சர் செனவிரத்ன மேலும் தெரிவித்தார். (க-2)

## தலைவரின் பொறுமைக்கும் எல்லை உண்டு

### புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் அரசுக்கு எச்சரிக்கை

எதிரிகளின் சூழ்ச்சிகளால் எமது போராளிகளை தளபதிகளை இழந் துவரும இந்தச் சூழலில் எமது தலைவரின் விழிகள் சிவக்கின் றன. எமது தலைவரின் பொறுமை யின் எல்லையைத்தான் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்று எதிரிகளுக்கு புலிகளின் குரல வானொலிப் பொறுப்பாளர் தமி ழன்பன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாரிஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் நினைவு சுமந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள்-2005 நிகழ்வில் பங் கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வேர் அறுபடாது தாயகப்பற்று தலோடு இளையோர் சமூகம் இயங்கி வருகிறது. புலப்பெயர்வி லும் இனத்துக்கும் மொழிக்கும் விடுதலைக்கும் பலம் சேர்க்கும் வகையில் பலமான ஒரு இளைய சமுதாயம் சர்வதேசம் எங்கும் உருவாகிவிட்டது.

போரும் சமாதானமும் தாயகத் தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எமது இனத்தைப் பலப்படுத்துவதற காகவே எமது எதிரி பலவழிகளி லும் செயறபட்டுக்கொண்டிருக் கிறான்.

எமது தலைவர் தீர்க்கதரிச சிந் தனையுடன் செயற்பட்டுவருவதால் எமது இனம் எங்கும் தலைநிமிர்ந்து நிற்கிறது. எதிரியின் தாக்குதல் வியூகங்களுக்கெல்லாம் உட்பட் டிருந்தால் நாம் பல தளபதிகளை யும், பொறுப்பாளர்களையும் போராளிகளையும் இழந்திருக்க நேரிட்டிருக்கும். இப்பொழுதும் இந்த நிலையில்கூட நாம் போராளி களை இழந்து வருகிறோம். எதிரி யின் சூழ்ச்சிகரமான தாக்குதலின் போது போராளிகள் வீரச்சாவடை கின்றனர்.

தலைவர் அவர்களின் விழி சிவக்கிறது. தலைவரின் பொறு மைக்கும் சகிப்புத்தன்மைக்கும் எல்லை உண்டு. அந்த எல்லை யைத்தான் தாயக மக்கள் எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். இரா ணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்து எமது மக்கள் அரசுக்கு மனுக்களை கொடுத்திருந்தார்கள். பின்னர் கண் காணிப்புக் குழுவிற்கும் அரச சார் பற்ற நிறுவனங்களுக்கும். சர்வ தேச சமூகத்திற்கும், மனுக்களை கொடுத்திருந்தார்கள். எதற்கும் தீர்வு எட்டப்படாத நிலையில் தான் போரை ஆரம்பிக்கும்படி தலை வருக்கு மக்கள் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

உங்களது இதயங்களில் இரண் டறக் கலந்தும் மனங்களில் நிறைந் தும் வாழ்ந்து வழிகாட்டிக்கொண் டிருக்கும் உயர் மதிப்புக்குரிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் வழியில் எமது இனம் பலம் பெற்றி ருப்பதால் இன்று எமது இயக்கத தைப் பற்றியும் எமது விடுதலைப் போராட்டம் பற்றியும், எமது தேசம் பற்றியும உலகப் பந்தில் தலை நிமிர்ந்து நின்று பேசும் வலுவைப் பெற்றிருக்கின்றோம்.

எமது இனம் சர்வதேச ரீதியாக எழுச்சி பெற்று வருகிறது. எமது இனத்தால் மட்டுமே ஒரே நிகழ்வை ஒரே மாதிரி பல நாடுகளில் எல் லாம் நிகழ்த்தக்கூடியதாக இருக் கிறது என அவர் மேலும் தெரிவித் தார். (அ-4)

## நீதிமன்ற வலைப்பின்னலில் மாற்றங்கள் செய்ய வேண்டும்

### பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர்

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகளைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால் நீதிமன்ற வலைப் பின்னலில் கணிசமான மாற்றங் களை மேற்கொள்வது அவசியம் என பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரி வித்துள்ளார்.

நீதித்துறையில் குற்றவியல் தொடர்பான வழக்குகளை விசா ரிக்கும் நடைமுறையில் தாமதங் கள் ஏற்படுகின்றன. இதன் காரண மாகக் குற்றவாளிகள் எதுவித அச்சமுமின்றிக் குற்றச் செயல்க ளில் ஈடுபடக்கூடிய போக்குத் தென் படுகின்றது.

இதனால் சாட்சியமளிப்பவர்க ளும் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறுகின்றார்கள் என அபேசூரிய தெரிவித்துள்ளார். நேற்று முன்தி னம் கொழும்பில் நடந்த செய்தி யாளர் மாநாட்டில் கருத்து வெளி யிட்டபோதே அவர் இதனைத் தெரி வித்தார்.

மேல்நீதிமன்றங்களில் பொது வான குற்றச்செயல்கள் தொடர் பான [illegible] மேற்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடப்பதாக வும் மேன்முறையீட்டு நீதிமன்றங் களில் அதனைவிட அதிகமான வழக்குகளை விசாரிக்க வேண்டி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இத்தகைய பின்னணியில் வழக் குகளை துரிதமாக விசாரிக்கக் கூடிய நடைமுறை உருவாக்கப் படுவது மிக அவசியம் எனவும் பொலிஸ் ஆணைக்குழுத்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

## பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவுக்காக அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறது

பாராளுமன்றத்தில் உணவு வழங்கும் பிரிவுக்கு வருடமொன் றிற்கு 80 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக காசின் பெறுமதி என்ற செயற்பாட்டின் கீழ் நடத்தப் பட்ட விசேட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

அந்த ஆய்வில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

உணவு தயாரிப்பதற்காக ஒதுக் கப்பட்ட நிதி திட்டமிட்ட முறை யில் பயன்படுத்தப்படாமையால் அதிகளவு செலவு ஏற்படுகின்றது. கடந்த ஜூலை 2004இல் உணவிற் காக 6,817,473 ரூபா செலவிட்ட போதும் 208,883ரூபா வருமானமே பெறப்பட்டுள்ளது. அதாவது செல வில் 3 வீதமே வருமானமாகக் கிடைக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களது பகலுணவிற்காக 2,54,288 ரூபா செலவாகின்ற போதிலும் 10,974 ரூபாவே வருமானமாகக் கிடைக் கின்றது. ஊழியர்களுக்கு 4,448, 249ரூபா பகலுணவிற்காக செல விடப்பட்டு 50,990 ரூபா மட்டுமே வருமானமாகப் பெறப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களது விருந்தினர்களுக்கான பகலுண விற்கு 1,570,414ரூபா செலவிடு கின்ற போதிலும் 46,925ரூபா மட் டுமே வருமானமாகக்கிடைக்கின் றது. அதேபோல் நிர்வாகப் பிரிவினர் களுக்காக 652,307 ரூபா செலவா கின்ற போதிலும் 14,424ரூபாவே வருமானமாகக் கிடைக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களால் பெருமளவு உணவு விரயமாகின் றது. அத்துடன் பகலுணவின் விலையை அதிகரிப்பதிலும் தடை கள் இருக்கின்றன.

உணவிற்கான செலவின்படி காலை உணவுக்கு நூறு ரூபாவும் மதிய உணவுக்கு 225ரூபாவும் செலுத்த வேண்டும். பாராளுமன்ற உணவுப் பிரிவினர், பாராளுமன்ற உறுப்பினர்கள், 1,100 ஊழியர்கள் மற்றும் அதிகார அமைப்புகள் போன்ற தரப்பினருக்கு மிகக் குறைந்த கட்டணத்திலேயே உணவு வழங்கி வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (அ-4)

## அரச சேவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்

### அமைச்சர் ஜனக பண்டார

(கொழும்பு)

நாட்டின் அரச சேவையில் பொருத்தமானவர்கள் கடமையாற் றுவது போன்றே பொருத்தமற்றவர் களும் கடமையாற்றுவதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள அமைச்சர் ஜனக பண்டார தென் னக்கோன் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு சிறந்த சேவை யினை வழங்கக்கூடிய வித்தில் அரசசேவையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பட்டதாரிகளுக்கு நிரந்தர நிய மனங்களை வழங்குவதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரி வித்தார். (ந-4)

## ஜே.வி.பியினரை கொல்ல கொழும்பில் தற்கொலைக் குண்டுதாரிகள்?

ஜே.வி.பி.உறுப்பினர்களை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்கு வந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. ஜே.வி.பி.பிரசார செயலாளர் விமல் வீரவன்ச உட்பட அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பி னர்கள் சிலரை இலக்குவைத்து தற்கொலைதாரிகள் எட்டுப்பேர் கொழும்பிற்கு வந்துள்ளதாக தேசிய இரகசிய சேவை தகவல் பிரிவின் கிழக்கு மாகாண கிளை யினால் கொழும்பிற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவரு கிறது.

ஆரையம்பதி, செல்வநகர் ஆகிய பிரதேசங்களிலிருந்து இவர்கள் வந்திருப்பதாகவும் அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவிற்குத் தலைமை தாங்குபவர் யாரெனக் கண்டறியப் பட்டுள்ளதாகவும் பாதுகாப்புக் கார ணங்களுக்காக அதனை வெளிப் படுத்த முடியாதிருப்பதாகவும் புல னாய்வுப்பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த 8ஆம் திகதிக்குப்பின்னரே இக்குழுவினர் கொழும்பிற்கு வந்தி ருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## கொழும்பில் சூடு மூவர் படுகாயம்

கொழும்பு ஆட்டுப்பட்டித்தெரு 155ஆம் தோட்டத்தில் நேற்றுமுன் தினம் பகல் 12.30மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். மூன்று ஆயுதபாணிகள் நடத்திய இத் துப்பாக்கிச் சூட்டில் 24வயதுடைய கந்தகுமார் என்பவரும் 24வயதுடைய ராஜ்குமார் என்பவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்து சிகிச்சைபெற்றுவரும் இருவரில் ஒருவரின்நிலை கவ லைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இதேவேளை, கிராண்ட் பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் விசாட் எனும் இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். இவர்மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்தியவர்கள் யாரென இதுவரை கண்டறியப்படவில்லை. (இ)

## புலிகளின் தரைவழிப் பயணம் தொடர்ந்து இழுபறி நிலையில்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகு தியில் புலிகள் இயக்க உறுப்பி னர்கள் தரைவழியாகப் பயணம் செய்ய யுத்தநிறுத்த கண்காணிப் புக்குழு முன்வைத்த மூன்றாவது யோசனையையும் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது எழுநதுள்ள புதிய நெருக்கடிநிலை குறித்து பேச்சுநடத்த கண்காணிப் புக்குழுத்தலைவர் இன்று வன்னி செல்கிறார்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகு திகளில் புலிகள் இயக்க உறுப் பினர்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்ய புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முன்வைத்த கோரிகைக்கு அரசாங் கம் மாற்றுயோசனையொன்றை முன்வைத்தது. ஆனால் அரசின மாற்று யோசனையை புலிகள் நிரா கரித்துவிட்டனர். அதன் பின்னர் புலிகள் இயக்கம் முன்வைத்த யோசனையையும் அதற்கு அர சாங்கம் முன்வைத்த மாற்று யோச னையையும் அடிப்படையாகக் கொண்டு யுத்த நிறுத்தக் கண் காணிப்புக்குழு தனியான மூன்றா வது யோசனையைத் தயாரித்து அரசாங்கத்திற்கு வழங்கியது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற் றது. பேச்சுவார்த்தையின் பின்னர் மூன்றாவது யோசனையையும் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்து விட்டதாகத் தெரியவருகிறது. இத னால் தரைவழிப் பயணம் குறித்து அரசாங்கத்துக்கும் புலிகள் இயக் கத்துக்கும் இடையில் புதிய இழு பறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கமும் புலிகள் இயக்கமும் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அரசாங் கம் புலிகள் இயக்கத்தின் தரை வழி பயணத்துக்குப் பாதுகாப்பு வழஙக வேண்டிய அவசியமில்லை எனவும் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பவே நாம் பாதுகாப்பு வழித துணைவழங்க முன்வந்தோம் என்று பாதுகாப்பு அமைச்சு மேற் படி நிராகரிப்புக்குக் காரணம் காட் டியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (அ-4)

# இன்று ஒரு தகவல்

## இளவரசரின் பணிவு!

ஒரு பெரிய காடு. அந்தக் காட்டின் மத்தியில் ஓர் ஆசசிரமம். அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் பல இடங்களிலிருந்து வரும் குழந்தைகளுககுப் பாடம் கற்பித்து வந்தார். ஏழை- பணக்காரர் என்ற வேறு பாடில்லாமல் எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பி வந்தார்கள்.

அரசர்களின் பிள்ளைகளும் கூட அவரிடம் தான் படிக்க வருவார்கள். ஆனால அந்த முனிவரைப் பொருதத வரையில் எல்லாப் பிள்ளைகளும் ஒன்று தான் . 'இது யார் வீட்டுப்பிள்ளை?' என்றெல்லாம் அவர் பார்க்க மாட்டார். அந்தக் குருகுலத்தில் எல்லோரும் சமம்.

மாணவர்கள் அனைவரும் அங்கேயே மாதக் கணக்கில் வருஷக் கணக்கில் தங்கியிருந்து பாடம் கற்றுக்கொண்டு போவார்கள்.

முனிவராகப் பார்தது, "நீ போகலாம்" என்று சொல்கிற வரையில் மாணவர்கள் அங்கேயே இருக்க வேண்டும்.படிக்க வேண்டும்.குரு குல வாசம். ஒரு சமயம் ஒரு ராஜாகுமாரனும் அவரிடம் வந்து படித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குப் பதினைந்து வயதிருக்கும். சில வருடங்களுக்குப் பிறகு அந்த முனிவர் தண்ணிடம் இருந்த மாணவர்களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கணிப்பதற்கு பல சோதனைகள் நடத்தினார்.

அவர் வைத்த தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து இனி 'நீ உன் வீட்டுக்குப் போகலாம்' என்று சொல்லி முனிவர் அனுப்பி வைத்துக்கொண்டிருந்தார்.

குருகுலவாசம் செய்த எல்லா மாணவர்களும் சென்று விட்டார்கள். கடைசியில் ஒரே ஒரு மாணவன் மட்டும் மீதியிருந்தான் அவனை மட்டும் முனிவர் வீட்டுக்கு அனுப்பவில்லை.

யார் அந்தப் பையன் தெரியுமா? ராஜகுமாரன்தான்!

அநத ராஜகுமாரனுடைய தந்தைக்கு அது தான் ராஜாவுக்கு-அங்கே வயது ஏறிக்கொண்டே போயிற்று.

அவர் "என்ன இது... கல்வி கற்கச் சென்ற இளவரசன் இன்னும் திருமபி வரவில்லையே!" என்று நினைத்தார். இளவரசன் வந்தால் விரைவில அவனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் தான் விலகிக்கொள்ளலாம். என்று அவர் நினைத்தார். இளவரசனுக்குக் கல்யாணம் வேறு செய்து வைக்க வேண்டும்.

ஆனால் இளவரசன் வருகிற வழியைக் காணோம்.

ராஜா பார்த்தார் சரி நேரில் சென்று விவரம் தெரிந்துகொண்டு வரலாம என்று எண்ணிக்காட்டுக்குப் புறப்பட்டார்.

அங்கே சென்று முனிவரைப் பார்த்தார். முனிவர் இவரை அன்புடன் வரவேற்றார்.

ராஜா மெதுவாக..."எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டீர்களாமே.. என் பிள்ளையை மட்டும்..!" என்று சொல்லி இழுத்தார்.

அதற்கு முனிவர் உடனே பதில் சொல்லவில்லை.

ராஜாவை அழைத்துச் சென்று விருத்தினர் குடிசையில் தங்க வைத்தார். பிறகு சொன்னார்.

உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் முதல் இடம்பெற்று விட்டான் இப்படி முதலாவதாக வரும் மாணனுக்கு நான் இன்னொரு தேர்வு வைப்பது வழக்கம் அதிலும் அவன் முதலாவதாக வந்துவிட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்ற கௌரவத்தை அடைவான் என்றார் முனிவார்.

அவ்விதம் சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து சென்றார்.

ராஜா அங்கேயே தங்கி இரவு படுதததுத் தூங்கினார் காலையில் எழுந்திருந்து அந்தக் குடிசைக்கு வெளியே வந்தார். பல் விளக்குவதற்காக.

அந்த சமயத்தில் தூரத்தில் ஒருவன் ஒரு கையில் கோடாலியை வைத்துக் கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக்கட்டை சுமந்து கொண்டு வருவது தெரிந்தது யாராவது விறகுவெட்டியாக இருக்கும் என்று அரசர் நினைத்தார் அருகில் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால்.. அது தன்னுடைய மகன்! திகைத்துப் போய்விட்டார்!

"என்ன இது? ஒரு ராகுமாரனைக் கூட இது போன்ற வேலைகளையெல்லாம். செய்யச் சொல்கிறார்களே!' என்று நினைத்தார்.

ராஜகுமாரன் விறகுக்கட்டை கொண்டுபோய் கொல்லைப்பக்கம் வைத்தான்.

அதே சமயம் முனிவர் அங்கே வந்தார். "என்ன மகனே! விறகுவெட்டிக் கொணடு வந்துவிட்டாயா? சரி.... இப்போது ஒரு துடைப்பத்தை எடுத்துக் கொள விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தைக் கூட்டிபெருக்கிச் சுத்தம் செய்..போ!" என்றார்.

"அப்படியே செய்கிறேன் குருவே" என்று கூறிவிட்டு இளவரசன் சென்றான். விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தை கூட்டிப் பெருக்கி நன்றாகச் சுத்தம் செய்தான்.

இதை ராஜா பார்த்தார் உடனே ஓடி வந்தார்.! மகனே! என்ன வேலை செய்கிறாய்? துடைப்பத்தைக் கீழே போடு!" என்றார்.

இப்போது அந்த ராஜகுமாரன் சொல்கிறான்

"தந்தையே! இது என்னுடைய குரு தேவரின் உத்தரவு! இங்கே நான் ஒரு மாணவன் இங்கே அரசனும் ஒன்றுதான் ஆண்டியும் ஒன்றுதான் குருதேவ்ர். சொல்வதை மறுக்காமல் செய்வதுதான் எங்கள் கடமை" என்றான

இந்த சமயம் முனிவர் அங்கே வந்தார். இளவரசனை முதுகில் தட்டிக்கொடுத்தார். பிறகு அரசரிடம் சொன்னார்.

அரசே உங்கள் பிள்ளை என்னுடைய கடைசி தேர்விலேயும் வெற்றி பெறறுவிட்டான்! பணிவுதான் மாணவர்களின் மிகவும் உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதுக்குப் பிடிக்காவிட்டாலும் கூட மறுக்காமல் செய்ய வேண்டும் அப்படிச் செய்வதால் எதைச் செய்லாம் எதைச் செய்யக்கூடாது என்ற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும்! செய்யக்கூடாததைக் கூட பெரியவர்கள் சொன்னால் செய்துதான் ஆகவேண்டும் என்ற பணிவு அவர்களுக்கு வந்துவிடும். இந்தக் குணம் வந்துவிட்டால்.. அவர்கள் எத்தனை கடினமான வேலையாக இருந்தாலும்கூட சுலபமாகச் செய்து முடிப்பாகள் துன்பததிலேயும் துவண்டு போக மாட்டார்கள். இந்தக் பணிவும் விவேகமும அவர்களிடம் மன உறுதியை ஏற்படுத்தும் அந்த உறுதி உங்கள் மகனுக்கு இப்போது வந்துவிட்டது இனிமேல்அவனை நீங்கள் அழைத்துக்கொண்டு போகலாம் அவன் நிச்சயமாகப பேரும் புகலும் பெறுவான் என்றார் குருதேவர்.

ராஜா முனிவரிடம் 'குருதேவா... புரிந்துகொண்டேன் என்னை மனனிக்க வேண்டும்' என்றார். பிறகு அரசர் இளவரசனை அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பினார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசாங்கத்தையும் புலிகளையும் மோத வைத்து சுகம் காண விரும்புவோரை அம்பலப்படுத்துவோம்

## - அமைச்சு டியூ.குணசேகர

(கண்டி)

திருகோணமலையின் தற்போதைய நிலையின் சூத்திரதாரிகள், அதன் பின்னணியில் செயற்படுகின்றவர்கள், புத்தர்சிலை அமைத்தவர்கள், அதற்கான நிதியுதவி வழங்கிவர்கள், அரசையும் புலிகளையும் மோதவைத்து சுகம் காண விரும்புபவர்கள் பற்றிய அனைத்து விபரங்களும் தற்போது வெளிவந்துள்ளன. இவற்றை விரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மககளுக்கு பகிரங்கப்படுத்துவார் என அரசியல் விவகார இன ஒருமைப்பாட்டு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 62 ஆவது ஆண்டு தினம் கண்டி கம்யூனிஸ்ட் நிலையமான ரன்மிதுர மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு நடைபெற்ற போது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளா என்ற வகையிலும், முதன்மை விருந்தினராகவும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இன ஒற்றுமைக்கும் தீர்வுக்கும் உறுதியான கொளகையுடன் செயற்படுபவர்களே இடது சாரிகள். எமது கட்சி ஒரு அரசியல் சந்தர்ப்பவாதக் கட்சியல்ல. சமுக மாற்றத்திற்கான இயக்கம்.

ரோகண விஜய வீரவைப்போல் ஒன்பது மாதத்தில் பிறக்கவிருக்கும் குழந்தையை ஒரு சில மாதங்களில் பெற நினைப்பவர்கள் நாம் அல்ல.

மூளை மாற்றம் என்பதை ஒரு நாளில் மாற்ற முடியாது. படிப்படியாகவே மாற்ற முடியும். நாமும் மனிதர்களே. நாம் தவறு செய்து அதற்காக வருந்தி திருந்தியுள்ளோம். 1965 ல் டட்லி - செல்வா ஒப்பந்தத்தினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து எதிர்த்தமை, ஊர்வலம் போனமை நாம் வரலாற்றில் செய்த பிழைகளாகும்.

ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்ததை நாம் ஆதரித்தோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒப்பந்தம் செய்து ஜே.வி.பி. சுதந்திரக் கட்சி என்பவை இணைந்த போது இது சரியான தீர்வல்ல என எடுத்துரைத்தோம். இது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் ஆனால் தொடராது என்பதையும் உணர்த்தியிருந்தோம். அது இன்று எவ்வளவு உண்மையாகியுள்ளது.

இன்று உலகில் தனிக்கட்சி ஆட்சி குறைந்து கூட்டாட்சிகளே ஏற்பட்டு வருகின்றன. இது 21ஆம் நூற்றாண்டின் முக்கிய அம்சமாகும். ஐக்கிய தேசிய கட்சியும் தனியாக ஆட்சி அமைக்க முடியாது. இலங்கை அரசியல் வரலாற்றில் எதிர்க் கட்சிகள் கூடிய ஆசனங்களைக கொண்டுள்ளன. இனவாத கட்சிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பதும் ஒரு புதுவிடயமாக சகல இடங்களிலும் உள்ளது. புரிந்துணர்வு இரண்டு பட்டுள்ளவர்களை ஒன்றிணைப்பது. அரசும் புலிகளுமே வேறு வேறாக உள்ளனர். இவர்களை இணைப்பதே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

இன்று பௌத்த குருமார் பேசுவதுபோல் அன்று கம்யூனிஸ்ட் பௌத்த குருமார் பேசியதை அச்சில் கொண்டுவர வேண்டும். நாம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து பிரிந்து சென்ற போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இருந்து கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தினோம். இதனை பின்னர் மக்கள் கட்சியும் ஏற்றது. இன்று அதே கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏறறுள்ளது. சமஸ்டி ஆட்சி பற்றி பண்டார நாயக்க கூறியபோது, அவரை வீட்டைச் சுற்றி நின்று எதிர்த்த பௌத்த குழுவினரில் இன்று உயிருடனிருப்பவர்கள் மிகவும் கவலைப்படுகின்றார்கள்.

யுத்தத்தின் பின் வடக்கில் அபிவிருத்தி கூடியுள்ளது. அதனோடு ஒட்டிய வடமத்திய மாகாண அபிவிருத்தியும் கூடியுள்ளது. இதற்காக ரணிலுக்கு நன்றி கூறவேண்டும்.

வடக்கில் பொருளாதார அபிவிருத்தி 3 வீதத்தில் இருந்து 12.6 வீதம் அதிகரித்துள்ளது. அதேபோல் மேல் மாகாணத்திலும் 6.2 வீதமும், தென் மாகாணத்தில் 5.5 வீதமும் கிழக்கில் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் 10 வீதமும் அதிகரித்துள்ளது. வடமத்திய மாகாணததில் விவசாயத்தை விட்டு விட்டு இராணுவத்தினருக்கு விபசார விடுதிகளை நடத்தியவர்கள் இன்று மீண்டும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இவையாவும் இந்த யுத்த நிறுத்தத்தால் கிடைத்த பலன்கள் ஆகும். இன்று வடக்கு 62 புதிய பாலங்களை அமைக்க அமைச்சரவை அங்ககாரம் வழங்கியுள்ளது. எனவே யார் எதைக் கூறினாலும நாம் வேகமாக பொதுக்கட்டமைப்பை செயற்படுத்த வேண்டும்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு மூலம், ஜனாதிபதிக்கு அதிகார்ரம் இல்லை, புலிகள் கையெப்பமிட்ட, முழு ஒப்பந்தத்தினையும் ஏற்க முடியாது. என்பவற்றுக்கு எதிராக இத் தீர்ப்பு அமைந்துள்ளது.

நமக்கு நாடுகள் கடன் அல்ல நன்கொடை களையே வழஙகியுள்ளன. எனவே இந்த நாடுகள் என்ன நடக்கின்றது என பார்த்துக் கொண்டிருக்கின்றன. நன்கொடைகள் கிடைக்காவிட்டால் அரச ஊழியர்களுடைய சம்பளத்திலேயே கடல்கோள் ஆதாரம் பெறவேண்டும்.

நீதியை சட்டத்தை இயற்றுபவர்களுக்கு கடல் கோள் பற்றி தெரியாது. இது சட்டத்தை அல்ல யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட வேண்டியது. நாம் தீர்ப்பு பற்றி பேசமுடியாது. ஆனால் விமல் வீரவன்ச போன்றோருக்கு உலக சட்டங்கள் தெரியாது. உலக சட்டம் 25.1 சரத்துப்படி மனிதாபிமான முறையில் நிராதரவானோருக்கு அரசு மூலமாக அல்ல. எப்படியும் உதவ முடியும். இதனடிப்படையிலேயே இந்தியா 1986ல் யாழ்ப்பாணத்தில் உணவுப பொருட்களைப் போட்டது. எனவே புலிகளுக்கும நேரடியாக உதவிகளை வழங்க முடியும். இந்த ஒப்பந்தமே நேரடியாக உதவி வழங்குவதை நிறுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் மீண்டும் யுத்தம், அழிவு ஏற்படும்.

ஜனாதிபதி தேர்தல் பற்றி உயர் நீதின்றத்தைத் தவிர வேறு யாரும் விளக்க முடியாது. ஆறுவருடம் ஜனாதிபதி ஆட்சிக் காலம். அவர் பதவி ஏற்ற தினத்திலிருந்து ஆறு வருடகாலமாகும். ஆனால் நான்கு வருடம் முடிந்த பின்னர் ஜனாதிபதி விரும்பினால் தேர்தல் நடத்தலாம். அப்படித்தேர்தல் நடத்தினால் 4 வருடத்திலேயே முதலாவது ஆட்சி முடிந்தது என அர்த்தம் வராது. எனவே, உயர்நீதிமன்றம் மட்டுமே இது பற்றி தீர்ப்பளிக்க முடியும்.

நாம் ஆட்சி ஏற்கும் போது சிறுபான்மை அரசு எனவே தான சபாநாயகர் தேர்வில் நான் தோல்வி கண்டேன். சோல்பெரியாப்பின் பிரகாரம், சிறுபான்மை அரசு கலைக்கப்பட வேண்டும். இந்த யாப்பில் அப்படி இல்லை. இந்த யாப்பின் படியே ஆதரவாகப் பயன்படுத்தியுள்ளோம். அரச தலைமை ஜனாதிபதி, முப்படைகளினதும் தலைமை ஜனாதிபதி எனவே அரசு தலைமை எம்மிடமே உள்ளது. எதிர்கட்சி அதிகமாக இருந்தாலும், ஐக்கிய தேசிய கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது. ஐக்கிய தேசிய கட்சியுடன் ஜே.வி.பி. சேராது அதே போல ஐக்கிய தேசிய கட்சியும் ஒரு போதும் ஜே.வி.பி.யை சேர்க்காது. எனவே பட்ஜட் வாக்கெடுப்பிலேயே அரசைக் கவிழ்கக முடியும். ஆனால் பட்ஜட் தோற்கடிக்கப்படாத பட்ஜட் ஆக அமையும்.

இனறு எதிர்கட்சினர் பலர் கூட தேர்தலை விரும்பவிலலை. ஓய்வூதியம், வாகனம் என்பனவே இவற்றுக்கு காரணம். பௌத்த பிக்குகளும் ஓய்வூதியத்தை எதிாபார்த்துள்ளனர்.

எனவே, நாம் உயர்நீதி மன்றத்தீர்ப்புக்கு உட்பட்ட விதத்தில் எமது பிரதிநிதிகளை நியமித்து முன் செல்ல வேண்டும். புலிகள் ஜே.வி.பி. போல் அல்ல அவர்கள் புத்திஜீவிகள். அவர்களும் இணைந்து செயற்படுவார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பாராமன்றத்தில் உரையற்றும் போது தென்னிலங்கையில் வாழும் 52 வீத தமிழாகள பற்றி சிந்தித்து உரையாற்றுமாறு நாம் கோரியுள்யோம். இன்று முஸ்லிம்கள் மத்தியிலும் ஜிகாத என்ற குழு உருவாகியுள்ளது. குருநாகலில் புத்தர் சிலை ஒனறு காரணமாக ஜகாத் குரலெழுப்பியுள்ளது. ஜே.வி.பி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இதை உணரவேண்டும் என டியூ.குணசேகர மேலும் தெரிவித்தார். (ந-4)

## பொதுக் காணிகள் சுவீகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள பெரும்பாலன குளங் களை அண்டிய பிரதேசங்களில் குடியேற்றம் என்ற பெயரில் சிலரால் பொதுக் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இதில் அரச அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டு இருக்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

இந்தநிலை தொடருமானால் வவுனியாவில் இன்னும ஒரு சில ஆண்டுகளில் தண்ணீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் என்று பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டுகினறன. எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (க-7)

## கற்பித்தல் சாதன உருவாக்கற்போட்டி

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூல வள நிலையம் நடாத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுககான கற்பித்தல் சாதன உருவாக்கற போட்டி நாளை வியாழக்கிழமை காலை9.00 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி வளாகத்தில் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (க-2)

## காணித்தகராறு விசாரணை; பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே கைகலப்பு; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

காணப்பிரச்சினை சம்பந்தமாகயாழ். பொலிஸ நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் விசாரணைக்கு அழைத்தவேளை பொலிஸ் நிலைய விசாரணைப்பகுதி பிரிவினுள் பொலிஸாருக்கு முன்பாக கைலப்பில் ஈடுபட்டதில் ஒருவர் காயமடைந்த நிலையல் யாழ். போதான வைத்திய சாலையில் அனுமதிககப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து தாக்கப்பட்டவரின் மகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்துள்ள முறைப்பாட்டில பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு முன்னே வைத்து எதிர் தரப்பினர் தனது தந்தையை தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இம் முறைப்பாட்டை அடுத்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரோகித பிரியதர்சன தாக்கப்பட்டவரை யாழ். போதான வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டதோடு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

தலைக்கவசத்தால் தாக்கியவரை யாழ். பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ந-19)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# கடின உழைப்பில் தமிழகப் பெண்கள்

என் . விஜயன்

38 ஆழிப்பேரலையால் மாமல்லவபுரக் கடல் பின்னகர்ந்து சென்றுவிட, தடலான அவ்விடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி மூலம் பல்லவர்

அருச்சுணனின் தவ வலிமைகண்டு மகிழ்வுற்ற சிவன் அருச்சுணனுக்கு பாசுபதம் வழங்கிய காட்சி. எட்டு அடி அகலமும் முப்பது அடி உயரமும் கொண்டதாகச் செதுக்கப்பட்டுள்ளது.



காலச் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டன.

முதியவரால் தெரிவிக்கப்பட்ட இச் செய்தி ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகியிருந்த போதிலும் உரிய இடத்தில் நின்று அந்தச் செய்தியைப் பரிமாறும் போது இருக்கக்கூடிய மகிழ்வு வித்தியாசமானதென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்பது எமக்குத் தெரியும்.

## வியாபாரத்தில் பெண்கள்


இந்திய நாட்டு நாணயப்பெறுமதியின் உறுதி காரணமாகப் பொருட்களின் விலை உயர்வு என்பது அங்கு அடிக்கடி ஏற்படுவதில்லை. பத்து இந்திய ரூபாய் இருந்தால் மதிய உணவைச சமாளிக்க முடியும். 2 ரூபா 50சதம் இருந்தால் பால் தேநீர் குடிக்கலாம். ஒரு முட்டையின் விலை ஒரு ரூபா 40 சதம். இந்த உண்மைகள் இலங்கையிலிருந்து சென்ற எமக்கு ஆச்சரியமாக இருப்பதில் வேடிக்கை இல்லை.

யாழ்ப்பாணத்தில் 2004 டிசம்பர் மாதத்தில் ஆறு ரூபாவுக்குத் தரப்பட்ட பால் தேநீர் 6 மாத இடைவெளிக்குள் 10 ரூபாவாக மாறிவிட்டது.

அரசின் விலையேற்றம் ஒருபுறம். அந்த விலையேற்றத்தை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு உணவுப் பண்டங்களுக்கு அறாவிலை வசூலிக்கும் வியாபாரிகள் மறுபுறம். இதுவே சமகாலத்து யாழ்ப்பாணப் பொருளாதார நிலை.

இந்த விலை உயர்வுகளால் ஏழை மக்கள் படும் துன்பங்களைச் சீர் செய்வதில் அரசுக்கு இருக்கக்கூடிய கடமைகள் கிடப்பில் கிடக்க, மனித உழைப்பு யாழ்ப்பாணத்தில் சோம்பல் கண்டுவிட்டது. குறிப்பாக உழைக்ககககூடிய மனிதங்கள் சந்திகளில் நின்று சல்லாபம் புரிகின்றன.

கி.பி.7-ம் நூற்றாண்டில் கற்பாறையில் செதுக்கப்பட்ட சிற்பம



இதனாலேயே பல்வேறு சமூக கலாசாரப் பிரச்சினைகள் முகிழ்ப்படைகின்றன.

இந்நிலையை தமிழகத்தில் மருந்துக்கேனும் காண்பது அரிது.


தமிழகத்தில் இருக்கக்கூடிய வேலையின்மை என்பது அரச வேலையையும், கீழுழைப்பு எனப் பொருளியல் பதத்தில் கூறப்படும் தகுதிக்கு ஏற்ற வேலையின்மையையுமே குறிக்கும். மற்றும்படி அங்குள்ள ஒவ்வொரு பிரஜையும் ஏதோவொரு வேலையைச் செய்துகொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

குறிப்பாக, பெண்களின் உழைப்பென்பது அங்கு முதன்மை பெறுகின்றது. யாழ்ப்பாணத்திலும் பெண்களின உழைப்பு கணிசமாக இருக்கின்ற போதிலும், அதற்குள் பதவிநிலை, கல்வி அந்தஸ்து என்ற படிநிலைகள் இருப்பதைக் காணமுடியும்.

தமிழகத்தில் இளநீர் வெட்டி விற்பதுமுதல், மாடிக் கட்டடங்களுக்கு சீமெந்து குழைத்துக் கொடுப்பது, கட்டடம் கட்டுவதுவரை பெண்களின் உழைப்பு உச்சம் பெற்றுள்ளது.

நாம் தங்கியிருந்த லொயலாக் கொலிச்சில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொணடிருந்தது. நாம் அங்கு சென்ற முதல் நாள் கொலிச் கன்ரீனில் தேநீர் குடிப்பதற்காக சென்றோம். கன்ரீனுக்கு எதிர்ப்பக்கமாகக் கட்டப்படும் கட்டடத் திற்கான சீமெந்தை பெண்களே குழைத்துக் கொடுத்தார்கள். மண், கல் என்பவற்றை தலையில் சுமந்தவாறு பெணகள் வந்த கோலம் வைகையாறு பெருக்கெடுத்த போது ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து அணை கட்டியது போன்ற காட்சியாக இருந்தது.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் செதுக்கப் பட்ட கருங்கல் யானை.



ஒருபுறம் ஆச்சரியம். மறுபுறம் வேதனை எம்மை ஆக்கிரமித்துக் கொண்டது. உழைப்பு என்ற பார்வையில் தமிழகத்துப் பெண்களைப் பார்க்கின்றபோது பெருமையாக இருந்தாலும், 'பூவையர்' என்று பெண்களுக்குப் பெயர் சூட்டிவிட்டு, பெரிய கடகங்களில கல்லைப்போட்டு அவர்களின் தலைகளில் ஏற்றிவிடும் அந்தப் பரிதாபம். அந்தோ! நம் தமிழகப் பெண்களுக்கு ஏன இந்த அவல நிலை. கல்லைச் சுமக்கும் பெண்கள் மீது கழிவிரக்கமே ஏற்பட்டது. (வளரும்)

# சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து மன்னாரில் பேரணி

சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் நகரில் நேற்று முற்பகல் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்டனப் பேரணி நேற்று முற்பகல் 10.45 மணியளவில் பொது விளையாட்ரங்கில் இருந்து ஆரம்பமாகி முற்பகல் 11.30 மணியளவில் மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

பேரணி மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தபின்னர் பிரதி மாவட்ட செயலாளர் திருமதி எஸ்.மோகனநாதனிடம் மகஜர் ஒன்றை பேரணியில் கலந்துகொண்டோர் கையளித்தனர். அநத மகஜரில் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மன்னாரில் பொதுக் கட்டடங்களில் இருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும்.

* மீனவர்கள் மீதான அனுமதிச் சீட்டுக் கெடுபிடிகளை நீக்கவேண்டும்.
* கரையோர பாதுகாப்பு இராணுவ வேலிகளை அகற்றவேண்டும்.
* மன்னார் பாலத்திற்கு கீழான துறைமுகக் கடற்படையினர் வெளியேற வேண்டும்.
* மன்னார் கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்க சமாசக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப் படையினர் வெளியேற வேண்டும். ஆகிய கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களையும் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் இந்த பேரணியில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியை முன்னிட்டு நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை மன்னார் நகர வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.இதேவேளை, சேது சமுத்திரத்திட்டததினால் தமது மீனவத் தொழிலுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகப் பேரணியில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கடற் றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.புதிய அமைச்சரவையை நேற்று பொறுப்பேற்ற பின்னர் இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் இதன் மூலம் மன்னார் மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

# பயணக் கட்டுரை – வாசகர் பார்வை

திரு என்.விஜயன்
(தமிழகப் பயணம் கட்டுரையாளர்)
வலம்புரி
யாழ்ப்பாணம்.

நீர்வை மணி
நீர்வேலி

*அன்புடையீர்,*

*தாங்கள் வலம்புரியிற் தொடர்ந்து எழுதிவரும் தமிழகப் பயணக்கட்டுரையைத் தொடர்ந்து வாசித்து, ரசித்து, வரவேற்று, நல்லதொரு முயற்சியெனப் பாராட்டுகிறோம். பயணக் கட்டுரைகள் பலவும் வாசித்திருத்தாலும் தங்களுடைய பயணக்கட்டுரை மற்றயவற்றில் இருந்து வேறுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.*

*பயணக் கட்டுரை எழுதுபவர்கள் வாசிப்பவர்களைக் கவரும் பாணியில் அழவுக்கதிகமான வேண்டாத பல விமர்சிப்புக்களை புகுத்திவிடுவதுண்டு.*

*தங்களுடைய பயணக்கட்டுரை உள்ளதை உள்ளபடியே சொல்வதோடு, பட்ட சுய அனுபவத்தையும் எடுத்துக்காட்டி வாசிக்கும் போது பயணத்தில் வாசகர்களும் சேர்ந்து கொள்ளும் ஒருவித உள்ளுணர்வையும் ஏற்படுத்துவதாயுள்ளது.*

*பத்திரிகையாளனாகப் பயணம் மேற்கொண்டதனால் பல பயனுள்ள பார்த்த, கேட்டவற்றையெல்லாம் ஒழுங்குபட எழுதிவருகின்றீர்கள்.*

*பலருக்கும் பயன்தரும் பணி தொடரட்டும். தமிழகப்பயணம், கட்டுரைநூலாக வெளிவரவேண்டும் என்றும், எமது வாழ்த்துக்களும் பாராட்டுகளும் உரியதாகும்.*

*நீர்வை மணி.*

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:17 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - I 45 நிமிடங்கள்

❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

◆ கீழே சில பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய சொல்லின் கீழ்க் கோடிடுக.

(01) மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர் தம்
தாம முடி மீது
தயங்கும் வயிரமதோ

1)உற்சாகம் 2)விழிப்பு 3)உறக்கம்

(02) ஒற்றைக் குடும்பம் தனிலே
பொருள் ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றக் கருமங்கள் செய்தே
மனை வாழ்ந்திடச் செய்பவள் அன்னை

1)பாடசாலை 2)குடும்பம் 3)முயறசி

(03) கொக்கரக்கோ என்று சேவல் கூவிவிட்டது
குயிலுங்கூடக் கூக்கூ என்று பாடிவிட்டது
திக்கனைத்தும் இருள் விலகி ஓடிவிட்டது
செங்கதிரும் வானில் மெல்ல ஏறிவிட்டது

1)சூரிய அஸ்தமனம் 2)நிலாக்காட்சி 3)சூரிய உதயம்

| | |
|---|---|
| ① | A B A C B D E H G S S Y P |
| ② | A B A C B D E H G U U X Q |
| ③ | A B A C B D E H G M N Z R |
| ④ | A B A C B D E H G A D R S |
| ⑤ | A B A C B D E H G T A S T |
| ⑥ | A B A C B D E H G H R T U |

அருகே தரப்பட்ட அட்டவணையை அவதானித்து சரியான விடைக்குரிய இலக்கத்தின் மீது புள்ளடி இடுக.

(04) A B A C B D E H G A D R S என்னும் தொடர் அமைந்துள்ள இலக்கம்.
[① ② ③ ④ ⑤ ⑥]

(05) A B A C B D E H G H R T U என்னும் தொடர் அமைந்துள்ள இலக்கம்.
[① ② ③ ④ ⑤ ⑥]

(06) A B A C B D E H G U U X Q என்னும் தொடர் அமைந்துள்ள இலக்கம்.
[① ② ③ ④ ⑤ ⑥]

(07) முதல் எழுத்துக்கள் **AB** ஆகவும் இறுதி எழுத்துக்கள் **ST** ஆகவும் அமைந்துள்ள நிரையைக் குறிக்கும் இலக்கம்.
[① ② ③. ④ ⑤ ⑥]

(08) நிரை ③ இனால் காண்பிக்கப்படும் ஆங்கில எழுத்துக்களை எழுதுக.

-----------------------------------------------

(09) நிரை ② இல் உள்ள முழு எழுத்துக்களிலும கீழ்வரும் எழுத்துக்கள் எத்தனை உள்ளன என எழுதுக.


A ------------------ B -------------------- C --------------------

(10) நிரலாக நோக்கும்போது ஆங்கில எழுத்துக்கள் அகரவரிசைப்படி அமைந்துள்ளன. அவற்றினை தெரிவுசெய்து இப்புள்ளிக்கோட்டில் எழுதுக.

-----------------------------------------------


◆ மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

(11) தவறான தொடர்பின் கீழ்க் கோடிடுக.





① ② ③ ④

(12) பொருத்தமற்ற சேர்மானத்தின் கீழ்க் கோடிடுக.




① ② ③ ④

(13) பொருத்தமற்ற இயல்பின் கீழ்க் கோடிடுக.




① ② ③ ④

◆ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(14) ஒரு மாணவன் பாதணிகளை அணியும்போது பின்வரும் செயல் ஒழுங்கைக் கையாள்கின்றான்.

காலுறை அணிதல் ⟶ பாதணியை அணிதல் ⟶ நூல் கட்டுதல்

இதன் நேர்மாறான செயலைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

-----------------------------------------------

(15) வியாபாரி ஒருவர் பொருள் ஒன்றை நிறுத்தபோது படித்தட்டில் 1/2 கிலோ கிராம் படியை வைத்து பொருளுடன் 75 கிராம படியையும் வைத்தார். பொருளின் நிறை யாது?

-----------------------------------------------

(16) ஒரு நீர்த்தடாகத்தில் சில மீன்கள் நீந்திச் செல்கின்றன. அவற்றுள் ஒன்றுக்குப் பின்னால் இரண்டும் ஒன்றுக்கு முன்னால் இரண்டும் நடுவில் ஒன்றுமாக மீன்கள் நீந்திச் செல்கின்றன. ஆகவே அங்கு அவதானிக்கக்கூடிய மீன்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை எத்தனை?

-----------------------------------------------

(17) ஒரு அறையில் சில பூனைகள் உண்டு. அவை எப்போதும் ஒரு பூனையை மூன்று பூனைகள் பார்க்கத்தக்கவாறு அமர்ந்துள்ளன. இங்கு இருநத பூனைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

-----------------------------------------------

(18) சம இடைவெளியில் நேராக நாட்டப்பட்டுள்ள தென்னைமரம், பனைமரம், மாமரம், புளியமரம் ஆகியவற்றுக்கிடையிலான தூரம் 24 கிலோ மீற்றராகும் பனைமரத்திற்கும் மாமரத்திற்கும் இடையிலான தூரம் யாது?

-----------------------------------------------

(19) 4 பென்சில்கள் வாங்கும் பணத்திற்கு 2 கொப்பிகள் வாங்கலாம். 4 கொப்பிகள் வாங்கும் பணத்திற்கு 2 புத்தகங்கள் வாங்க்லாம். 1 பென்சிலின் விலை ரூபா 5 எனின் 1 புத்தகத்தின் விலை என்ன?

-----------------------------------------------

◆ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(20) மனிதனுடன் தொடர்பற்றது.
1)கோபம் 2)சிரிப்பு 3)சேமிப்பு 4)வேட்டை

(21) தாவரங்களுடன் தொடர்புறாதது.
1)உணவு உற்பத்தி 2)உணவு சேமிப்பு
3)உணவு உண்ணுதல் 4)பச்சை நிறம்

(22) பாடசாலையுடன் தொடர்பில்லாதது.
1)கட்டடம் 2)ஆய்வுகூடம் 3)அலுவலகம் 4)சத்திரசிகிச்சைக்கூடம்

◆ கீழ்வரும் அழைப்புக் கடிதத்தில் சொற்கள் அமைய வேண்டிய இடத்தில் சில கூடுகள் உள்ளன. கூடுகளுக்குப் பொருத்தமான சொற்களை கீழே இருந்து தெரிவுசெய்து கோடிடுக.

எங்கள் மாணவமன்றத்தின் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவையொட்டி [1] நிகழ்வை எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 [2] பாடசாலை பிரதான மண்டபத்தில் நடாத்த திட்டமிட்டுள்ளோம். இவ்விழாவில் மாணவர்கள் கலைநிகழ்ச்சிகள், பேச்சுக்கள், விவாதங்கள், பரிசில் வழங்கல்கள் போன்ற பல [3] இடம்பெறவுள்ளன. இவ்விழாவுக்குத் தாங்கள் [4] விழாவினை சிறப்பிக்குமாறு அன்போடு [5]

(23) [1] வது கூட்டுக்குப் பொருத்தமான சொல்
1)வெள்ளிவிழா 2)பொன்விழா 3)வைரவிழா

(24) [2] வது கூட்டுக்குப் பொருத்தமான சொல்
1)முற்பகல் 2)பிற்பகல் 3)மணிக்கு

(25) [3] வது கூட்டுக்குப் பொருத்தமான சொல்
1)நிகழ்வுகள் 2)போட்டிகள் 3)விவாதங்கள்

(26) [4] வது கூட்டுக்குப் பொருத்தமான சொல்
1)பணம் தந்து 2)வருகைதந்து 3)வருகை தராமல்

(27) [5] வது கூட்டுக்குப் பொருத்தமான சொல்
1)கேட்கின்றோம் 2)சொல்கின்றோம் 3)அழைக்கின்றோம்

◆ கீழே சில நிகழ்வுகள் நடைபெறுவதாக தரப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்வு நடைபெறின் அதன் விளைவு எப்படி அமையும் எனத் தெரிவு செய்து கோடிடுக.

(28) காட்டிலுள்ள விலங்குகள் யாவும் தாவரங்களை மட்டுமே உணவாக உட்கொள்ளுதல்

விளைவு
1)விலங்குகளுக்கு உணவு கிடைப்பதால் எல்லாம் சந்தோஷமாக இருத்தல்.
2)தாவரங்கள் விரைவாக அழிவடைந்து பின் எல்லா விலங்குகளும் அழிதல்.
3)விலங்குகள் ஒன்றை ஒன்று சாப்பிடாதாகையால் விலங்குகளின் ஒற்றுமை அதிகரித்தல்.

(29) உங்கள் வீட்டிலுள்ள வளர்ப்பு நாய் ஒன்று திடீரென மனிதரைப் போல் கதைக்க ஆரம்பிக்கின்றது.

விளைவு
1)உங்கள் வீட்டு நாய் ஏனைய நாய்களை அழைத்து எப்படிக் கதைக்கலாம் எனச் சொல்லிக் கொடுக்கும்.
2)நாய் கதைக்கும் அதிசயத்தைப் பார்க்க மக்கள் பெரும் திரளாக உங்கள் வீட்டில் கூடுவர்.
3)கதைக்கத் தொடங்கிய நாய் தனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும்.

(30) பூமியிலுள்ள கற்கள் யாவும் பொன்னாக மாறினால்

விளைவு
1)மக்கள் யாவரும் கற்களை பொன் விலைக்கு விற்றுப் பணக்காரர் ஆவர்.
2)பூமியெங்கும் பொன் தகதக என மினுங்க அழகாக இருக்கும்.
3)பொன்னின் மதான மக்களின் ஆசை குறைந்து வேறு பொருட்களை நாடுவர்.

◆ கீழே இரு கூற்றுக்கள் தரப்படுகின்றன. அவற்றை வாசித்து விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்க.

(31) கூற்று I - நாம் ஒருவருக்கொருவர் உண்மையாகவும் நேர்மையாவும் அன்பாகவும் இருக்க வேண்டும்.
கூற்று II - இதனால் வீண் சண்டைகள், முரண்பாடுகள் வராமல் தடுக்கலாம்.

1)கூற்று I சரி 2)கூற்று II சரி 3)கூற்று I கூற்று II இரண்டும் சரி

(0 ஆம் பக்கம் பார்க்க...)

# பாலா - நோர்வே தரப்பினர் இவ்வாரம் இலண்டனில் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் நோர்வே நாட்டின் சமாதானத் தூதுக் குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு இந்த வாரம் இலண்டனில் நடைபெறவுள்ளது.

நோர்வே நாட்டின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் குழுவினர் இந்த வாரம் இலண்டன் செல்கின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள அரசியல நிலைமைகள் மற்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வது தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையில் இந்தப் பேச்சுவார்ததை நடைபெறவிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தால் தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நகர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெறலாம் எனறு தெரியவருகின்றது.

எனினும், இந்தச சந்திப்பு தொடாபான கால நேரம் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

# திருமுறைப் பெருவிழா

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் ஆடி மாதம் பௌர்ணமித தினத்தில் நடாத்திவரும் திருமுறைப் பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி சோ.தில்லைநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், சமயக் குரவர்களுக்கும் பன்னிரு திருமுறைகளுக்கும் சோடசோபசார பூசை, திருநெறிய தமிழிசை மாமணி கௌரவிப்பு, சிறப்புச் சொற்பொழிவு, மாகேஸ்வர பூசை ஆகியன நடைபெறும். (க)

(0 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

(32) கூற்று I - ஆமையின் உரோமத்தால் ஆன பொருட்களின் விலை அதிகம்.
கூற்று II - ஆமையில் இருந்து உரோமத்தைப் பெற முடியாது.
1)கூற்று I சரி 2)கூற்று II சரி 3)கூற்றுக்கள் இரண்டும் பிழை

(33) கூற்று I - சிலர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரமாக செல்வதுண்டு
கூற்று II - வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவாகள் பயன்படுத்தும் ஒரு பொருளாகும்.
1)கூற்று I தவறு 2)கூற்று II சரி 3)கூற்றுக்கள் இரண்டும் சரியானவை

(34) கூற்று I - தரம் 5 மாணவா்களாகிய நாம் ஊக்கமுடன் படிக்க வேண்டும்
கூற்று II - ஏனெனில் புலமைப்பரிசில் பரீட்சை ஒருதடவை மட்டுமே நடைபெறும்.
1)கூற்று I தவறு 2)கூற்று II தவறு 3)கூற்றுக்கள் இரண்டும் சரியானவை

(35) கூற்று I - சில வகை முயல்களுக்கு நீண்ட கொம்பு வளர்வதுண்டு.
கூற்றுII - முயல் கொம்பு அரிதாகக் கிடைப்பதால் வீட்டில் வைத்திருப்பது அதிஷ்டமாகும்.
1)கூற்று I சரி 2)கூற்று II தவறு 3)கூற்றுக்கள் இரண்டும் தவறானவை

**◆ பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்களைச் சரியான ஒழுங்கில் அமைத்தால் ஒரு கதை உருவாகும். அச்சரியான ஒழுங்கைக் குறிக்கும் இலக்கத்தை அருகேயுள்ள பெட்டியினுள் ஒழுங்குபடுத்தி எழுதுக.**


(36) ① பின்னர் நான் மிக விரைவாக பஸ்தரிப்பிடத்தை நோக்கி நடந்தேன்
② நான் பஸ்வண்டியின் முன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு டிக்கட் ஒன்று வாங்கினேன்
③ நான் அதிகாலையில் எழுந்தேன்
④ அங்கு வந்த பஸ்வண்டியில் ஏறினேன்
⑤ பின்னர் முகங்கழுவிக்கொண்டு காலை உணவை உட்கொண்டேன்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(37) ① நான் முற்றத்தில் குழிதோண்டி
② அக்கா எனக்கு றோசாச் செடியொன்றைக் கொடுத்தார்
③ அதில் பூ ஒன்று பூத்தது
④ றோசாச் செடியை அதில் நாட்டினேன்
⑤ றோசாச் செடியை நாட்டி சிறிது நாட்கள் சென்ற பின்னர்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

**◆ A,B,C,D,E என்னும் 5 செங்கற்கள் ஒரு தராசினால் நிறுக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களை பின்வரும் உரு காட்டுகின்றது.**




சந்தர்ப்பம் 1 சந்தர்ப்பம் 2 சந்தர்ப்பம் 3 சந்தர்ப்பம் 4

(38) நிறை குறைந்த செங்கல் எது / எவை? ---------------------------
(39) நிறை கூடிய செங்கல் எது / எவை? ---------------------------
(40) C ஐ விட நிறை குறைந்த செங்கற்கள் எது / எவை? ---------------

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 17

மாணவர் முழுப்பெயர் : ..................................
பாடசாலையின் பெயர் : ..................................
வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 26.07.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 17
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:15

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

| | |
|---|---|
| 01.பி.சந்தோஜன் | யா/தேவரையாளி இந்துக்கல்லூரி. |
| 02.றெ.அலெக்சன் | யா/மத்திய கல்லூரி. |
| 03.வி.பிரியங்கா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 04.யோ.சிறீநங்கை | யா/தேவரையாளி இந்துக்கல்லூரி. |
| 05.மு.பிரசண்ணா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 06.க.போல்றாஜ் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 07.ப.ஸ்ரெபான் | யா/மத்திய கல்லூரி. |
| 08.த.சானுஜன் | யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 09.ப.மதூஷன் | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 10.கு.ஜெனோலின் | யா/மத்திய கல்லூரி. |
| 11.கி.மாதுளா | யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை. |
| 12.ஓ.நிதூஷன் | யா/உடுவில் மகளிர் கல்லூரி. |
| 13.ஈ.பிருந்தன் | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி. |
| 14.செ.துவாரகா | யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி. |
| 15.ஜெ.மதுஷணா | யா/மானிப்பாய் சோதிவேம்படி மகா வித்தியாலயம். |
| 16.சு.தினேசினி | யா/வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 17.பி.சகானா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 18.ச.நிருசிகா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 19.த.கதீஸ் | யா/அராலி இந்துக் கல்லூரி. |
| 20.யோ.கபீர்த்தனா | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம். |
| 21.கு.அலெக்ஸ் | யா/மத்திய கல்லூரி. |
| 22.சி.லதாயினி | யா/இராமநாதன் கல்லூரி. |
| 23.த.மதுசன் | யா/மத்திய கல்லூரி. |
| 24.கி.விதுசா | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 25.செ.சுலக்சன் | யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தி. |
| 26.கு.சரண்யா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 27.அ.அருள்மேரி | யா/புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம். |
| 28.சி.சினேகா | யா/மானிப்பாய் றோ.க.த.க பாடசாலை. |
| 29.ச.கம்சலா | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 30.செ.நிஷானி | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 31.ச.அனஸ்ரிபன் | யா/மத்திய கல்லூரி. |
| 32.தி.திவ்வியா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 33.கு.றஜீவன் | யா/மத்திய கல்லூரி. |
| 34.எ.அ.ரொமெல் | யா/புனித பத்திரிசியார் கல்லூரி. |
| 35.வி.சிந்துஜன் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 36.பு.பிரியதர்சன் | யா/நவாலி மகா வித்தியாலயம். |
| 37.கு.சுரேன் | யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 38.இ.கவிதினி | யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி. |
| 39.அ.பாலமுரளி கிருஷ்ணா | யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 40.ஜெ.சுஜனிகா | யா/மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி. |
| 41.செ.மாதுர்ஜா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 42.செ.அனோஜன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 43.பு.ரிசாந்தினி | யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 44.இ.வைஷ்ணவி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 45.நா.பிரசாந் | யா/சித்தி விநாயகர் வித்தியாலயம். |
| 46.மு.கோபாலராஜ் | யா/விக்ரோரியாக் கல்லூரி. |
| 47.மு.விமலலோசிகா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 48.பி.பிரசாந்தினி | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 49.சா.பிரவீன்சன | யா/சென்ஜோன்ஸ் கல்லூரி. |
| 50.க.லக்ஷனா | யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை. |
| 51.தி.சங்கீதா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |

## வினாத்தாள் 15 இன் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **01.** (2) | **02.** (3) | **03.** (3) | **04.** (3) | **05.** (1) |
| **06.** 1)குருவிக்குஞ்சு | 2)அணில் | | 3)ஆட்டுக்குட்டி | **07.** (3) |
| **08.** (1) | **09.** (3) | **10.** (4) | **11.** (2) | **12.** (3) |
| **13.** (2) | **14.** (2) | **15.** (3) | **16.** (3) | **17.** (1) |
| **18.** C | **19.** B, E | **20.** F | **21.** D, G | **22.** (3) |
| **23.** (1) | **24.** (2) | **25.** (1) | **26.** (2) | **27.** (2) |
| **28.** (1) | **29.** (2) | **30.** (3) | **31.** (2) | **32.** (1) |
| **33.** (2) | **34.** சாயி | **35.** அபூபக்கர் | **36.** சாம்பவி | **37.** அருணி |
| **38.** வரன், மஞ்சு, அப்புகாமி | | | **39.** (3) | **40.** (4) |

## சுற்றாடல் தின நாடகப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா

### மருதானையில் 27இல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னட்டு இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு பரிசில வழங்கும் வைபவமும் இம் 3 நடாகங்களை மேடையேற்றும் நிகழ்வும் எதிர்வரும் 27ஆம் திகதி மருதானை ரவர் மண்டபத்தில் அமைசசர் ஏ.எச்.எம்.பௌசி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்ற கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு 25ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப்பெற்ற யாழ். இந்து மகளிர் ஆரமபப் பாடசாலைக்கு 15ஆயிரம் ரூபாவும்,3ஆம் இடத்தைப் பெற்ற மன்னார் புனித சவேரியர் ஆண்கள கல்லூரிக்கு 10ஆயிரம் ரூபாவும வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இம் 3பாடசாலைகளின் நாடகங்களும் மேடையேற்றப்படவுள்ளன.

மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு 10ஆயிரம் ரூபாவும்,யாழ். மத்திய கல்லூரிக்கு 7ஆயிரத்து 500 ரூபாவும்,கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும் பாடசாலைகளுக்கு காசோலையாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இப்போட்டியில் கலந்து கொண்ட அணைத்துப்பாடசாலைகளுக்கும் ஆறுதல் பரிசாக 2000 ஆயிரம் ரூபா அனுப்பிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ரு-19)





ஜேர்மனி சின்டில்பிங்கன் நகரில் அண்மையில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான விளையாட்டுப் போட்டி நிகழ்விலிருந்து ....

## தலைவர் நிதியத்திலிருந்து நிதி உதவி

மட்டக்களப்பு கோரளைப்பற்று மற்றும் வாழைச்சேனையில் போரினால பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மாவீரர் குடும்பங்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் நிதியுதவி வழங்கப்பட்டுளளது.

புலிப்பாய்ந்த கல்லென்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வில் 41குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு குடும்பம் ஒன்றுக்கு 80 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் பால் இழந்த தமது பொருளாதார நிலைமையை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டத்தின் அங்கமாக இன்று தேசியத் தலைவரின் நிதியில் இருந்து ஒரு உதவித்தொகை வழங்கபபட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானு,மட்டக்களப்பு மாவட்ட அரசியலதுறைப்பொறுப்பாளர் இளந்திரையன், மட்டக்களப்பு மாவீரர் குடும்ப பணிமனை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், குடும்பிமலைக் கோடடப் பொறுப்பாளர் உமாரமணன, மட்டக்களப்பு மாவடட மாவீரர் காப்பகப்பொறுப்பாளர் ஐங்கரன்,குடும்பிமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒளியன், தமிழர் புனர்வாழ்வுக கழக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-4)

## இந்துகலாசார அமைச்சின் அனுசரணையில் இன்று மாவிட்டபுரத்தில் திருவிழா


(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் திருவிழா நடாத்தப்படுகிறது என இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாலயத்தில் இன்று இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் திருவிழாவுக்கு இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அணைவரும் செல்லவுள்ளார்கள்.

இவவாலயத்தின் திருத்த வேலைகளுக்கு இந்து கலாசரர அமைச்சினால் பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டிந்தமை குறிப்பிடத்தக்கது. (ரு-19)





கனடா ரொறன்ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற "களக்கலை மாலை" நிகழ்வுக் காட்சிகள்



## ராஜீவ் கொலை வழக்கு;

## இலங்கைத் தமிழர்கள் இருவரை விடுதலை செய்ய சுப்ரீம்கோர்ட் தடை

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி பெரும்புதூரில் மனித வெடிகுண்டுத தாக்குதலில் கொல்லப்பட்டாா.

இநதக் கொலை வழக்கு தொடர்பாக சி.பி.ஐ சிறப்புகுழு விசாரணை நடததி 21 பேர் மீது வழக்கு பதிவு செய்தது.

இந்தக் கொலை வழக்கில் இலங்கை, தமிழர்களான லிங்கம் மற்றும் வசந்தன் ஆகிய மேலும் 2 பேர மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. ராஜீவ்கொலையில் இந்த 2 பேருக்கும் முக்கிய பங்கு உள்ளது என்று சி.பி.ஐ. குற்றஞ் சாட்டியது.

ஆனால் இந்த 2 பேரையும் விடுதலை செயயுமாறு சென்னை உயர் நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி உத்தர விட்டது. லிங்கம், வசந்தன் 2 பேரும் இப்போது செங்கல்பட்டில் உள்ள இலங்கை அகதிகள் தனி முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். அனுமதியின்றி அவர்கள் இநதியாவுக்குள் வந்து தங்கியதாக வெளிநாட்டினா சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டு அவாகள் மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது.

லிங்கம், வசந்தன் இருவரை யும் சென்னை உயர்நீதிமன்றம் விடுதலை செய்ததை எதிர்த்து சி.பி.ஐ இயக்குநர் டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அந்த அப்பீல் மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ராஜீவ்காந்தி கொலையில் இந்த இருவருக்கும் முக்கிய பங்கு உள்ளது.

சி.பா.ஐ. சிறப்புக் குழு விசாரணையிலும், பல்மனை கண்காணிப்பு குழு அறிக்கையிலும் இந்த 2 பேருக்கும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஜெயின்கமின் அறிக்கை அடிப்படையல்தான் மேல் விசாரணை நடத்த பல்முனை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. மத்திய அரசு இதன் அடிப்படையில் நடவடிக்கை அறிக்கை தாக்கல் செய்தது.

நடவடிக்கை அறிக்கையில் இந்த 2 பேர்களும் இடம் பெறவில்லை என்றாலும். பல முனை கண்காணிப்பு குழு இவர்களது முக்கிய பங்கு குறித்து விசாரணை நடத்தி வருகிறது. எனவே இவர்கள் 2 பேர் விடுதலைக்கு தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுமீது சுப்ரீம் கோர்ட்டு நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது. லிங்கம், மற்றும் வசந்தன் ஆகியோரை விடுதலை செய்து சென்னை ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் மேற்கொள்ளப்பட்ட மேல் விசாரணை நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து இரு வாரத்தில் மத்தியஅரசு தெரிவிக்க வேண்டும். 1999 முதல் இவர்கள் இரண்டு பேரும் காவலில் வைக்கப் பட்டுள்ளனர். விசாரணைக்கு இலங்கை அதிகாரிகள் ஒத்துழைக்க வில்லை. எனவே அதிக நாட்கள் அவர்களை அங்கு வைத்திருக்க முடியாது என்றும் சுப்ரீம்கோர்ட் தனது உத்தரவில் கூறியுள்ளது.

(ரு-4)

## பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதி;

## அடிப்படை உரிமை மனுக்களை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப் பட்ட சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ பொதுக கடடமைப்பில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை நியமிக்க உத்தரவிடுமாறு கோரித்தாக்கல் செய்யபபட அடிப்படை உரிமை மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

மேல் நீதிமன்றம் எதிர்வரும் யூலை மாதம் 29ஆம் திகதி பிரதிவாதிகளுக்குத் தமது கருத்துக்களை முன்வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவப் பொதுக்கட்டமைப்பில் பிராந்திய சபைகளுக்கு போதுமானதும் சமநிலையானதுமான முஸ்லிம் பிரநிதிகளை உள்ளடக்க உத்தரவிடுமாறு இந்த மனுக்களில் கோரப்பட்டிருந்தது.


இந்தமனுவில் நிவாரண புனர்வாழ்வு அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் பிரதிட் பணிப்பாளர் சண்முகலிங்கம ரஞ்சன் ஆகியோருடன் சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப் பட்டுள்ளன.

இந்த மனுக்களை காத்தான் குடி மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங் களைச் சேர்ந்தவர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

(ரு-4)

# உலகளாவிய தீவிரவாதத்திற்கு கூட்டாக மரணஅடி கொடுப்போம்

## புஷ் - மன்மோகன்சிங் சூளுரை






(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்கு 3நாள் சுற்றுப்பயணமாகச்சென்ற பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அங்கு வெள்ளை மாளிகையில் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. அப்போது உலகளாவிய தீவிரவாதத்தை ஒழிக்க இருநாட்டு தலைவர்களும் சபதம் செய் தனர்.

பிரதமர் மன்மோகன்சிங் தனது மனைவி குருசரண் ·கவுர் மற்றும் உயர் மட்டக்குழுவுடன் நேற்றுமுன் தினம் அமெரிக்க தலைநகர் வோஷிங்டன் சென்றார். அங்கு 3 நாள் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்துகொள்கிறார்கள்.



நேற்றுமுன் தினம் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் பிரதமர் ,மன்மோகன்சிங்கிற்கும், அவரது மனைவிக்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வெள்ளை மாளிகை புல்வெளியில் மன்மோகன்சிங்கும், ஜனாதிபதி புஷ்ஷும் ஒன்றாக இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர். அப்போது பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டது.

ஜனாதிபதி புஷ் அளித்த வரவேற்பு மகத்தானது.அவரது ஆட்சிக் காலத்தில் இது போன்று 4 உலகத் தலைவர்களுக்குதான் வரவேற்பளித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த அரிய வாய்ப்ப்பைப்பெற்ற 5வது தலைவர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. இது இந்தியாவுக்கு வழங்கப்பட்ட கெளரவம் ஆகும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்வேற்பு நிகழ்ச்சியில் புஷ் பேசியதாவது,

பொருளாதார முன்னேற்றத்துக்கும், உலக அமைதிக்கும் இரு நாடுகள் இடையே வலுவான உறவை எதிர் பார்க்கிறோம். இப்போது எப்போதும் இல்லாத அளவுக்கு இந்திய- அமெரிக்க உறவு வலுவாக உள்ளது: அது வருங் காலத்தில் மேலும் உறுதிபெறும்.

உலகின் பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர்களாக நாம் சந்திக்கிறோம். வளமான, பாதுகாப்பான உலகை உருவாக்குவதற்கு பேச்சுவார்த்தை மூலம் வழிகாண்போம். உங்கள் வருகை ஒத்துழைப்புக்கு திருப்புமுனையாக அமையும். இருநாட்டு மக்களும் நட்புக்கு கைகொடுக்கிறார்கள். செழிப்பு-சமாதானம் - உறுதிப்பாடு ஆகியவற்றுக்கு உழைக்க உறுதிபூண்டு உள்ளனர்.

சுதந்திரத்தில் இரு நாடுகளும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டன. இரு நாடுகளும் உலகளாவிய தீவிரவாதத்தை எதிர்த்து போராடுகின்றன. தீவிரவாதத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்திக்கத் தயாராக உள்ளன. இந்தியா தனது மக்களின் நலனுக்காக பொருளாதாரத்தில் வலுவடைந்து இருக்கிறது. அதற்காக 1990 ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வெற்றி அடைந்துள்ளது. அமெரிக்கா பலமான நாடாக வளருவதற்கு அமெரிக்காவில் வாழும் இந்தியர்களின் உழைப்பை மறக்கமுடியாது. இவ்வாறு புஷ் பேசினார்.


வரவேற்புக்கு நன்றி தெரிவித்து பிரதமர் மன்மோகன்சிங் பேசியதாவது,

எனக்கும், எனது மனைவிக்கும் உற்சாக வரவேற்பு அளித்ததற்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இருநாட்டுக்கும் பொதுவான பொறுப்பு உள்ளது. சவால்களை கூட்டாக சந்திக்கவேண்டி இருக்கிறது. உலகளாவிய தீவிரவாதத்துக்கு கூட்டாக நின்று மரணஅடி கொடுப்போம்.

முன்னேற்றம், ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை, சட்டம்- ஒழுங்கு ஆகியவற்றில் இரு நாடும் பொதுவான நம்பிக்கை வைத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

(ற)



அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் பூனை ஒன்றை உருவாக்கி உள்ளனர்.

உயிரினங்களின் ஒரு செல்லை எடுத்து அதன்மூலம் புதிய உயிரை உலகில் பிறக்க செய்வது குளோனிங்முறையாகும். இந்த ஆராய்ச்சியில் அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதன் பயனாக அந்தப் பல்கலைகக் கழக விஞ்ஞானிகள் குளோனிங்முறையில் பூனை ஒன்றை உருவாக்கி உள்ளனர். இந்தப் பூனை மற்றப் பூனைகளைப் போனறு ஆரோக்கியமாகக் காணப்படுகிறது. படத்தில் குளோனிங் பூனையைக் காணலாம்.

## துப்புக் கொடுத்தால் ரூ.41 இலட்சம் பரிசு!

(பிலிசி)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கடந்த மேமாதம் அமெரிக்காவில் உள்ள ஜியாங் ஜியா என்ற இடத்தில் உள்ள பிலிசி சுதந்திர சதுக்கத்தில் நடந்த ஒருநிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அங்கு அவர் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு மர்ம ஆசாமி அவரை நோக்கி வெடிகுண்டு வீசினான். அந்தக் குண்டு மேடைக்கு அருகே 100அடி தூரத்தில் கீழே விழுந்து வெடித்தது. இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் வெடிகுண்டு வீசிய மர்ம ஆசாமி தப்பி ஓடி விட்டான்.

அதிபர் புஷ் மீது குண்டுவீசி தாக்க முயன்ற மர்ம ஆசாமி பற்றி துப்பு கொடுத்தால் ரூ.5 இலட்சம் பரிசு தரப்படும் என்று ஜியாங் ஜியா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஜியாங் ஜியா உள்விவகார அமைச்சகம் நேற்றுமுன்தினம் ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டது.

அதிபர் ஜோர்ஜ் புஷ் மீது குண்டு வீசி தாக்க முயன்றவர் பற்றி துப்புக் கொடுத்தால் ரூ.41 இலட்சம் பரிசு வழங்கப்படும் என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (ற)

# மெக்சிகோவில் கடும் 'எமிலி' எண்ணெய்க் கிணறுகள் மூடல்

உலக தரிசனம்

## லண்டனில் அதிகரித்து வரும் இனவெறித் தாக்குதல்

(லண்டன்)

லண்டன் வெடிகுண்டுத் தாக்குதலுக்குப் பிறகு இனவெறித் தாக்குதல்கள் 10 மடங்கு அதிகமாகிவிட்டதாகத் தெரியவந்துள்ளது. பிரிட்டன் தலைநகர் லண்டனில் கடந்த 7ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலுக்குப்பின் இனவெறித் தாக்குதல் தொடர்ந்து நடந்துவருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த 10 நாட்களில் மட்டும் 500 இனவெறித் தாக்குதல்கள் நடந்துவிட்டதாக புகார்கள் வந்துள்ளன. வழக்கமாக பதிவாகும் இனவெறிக் குற்றங்களைவிட தற்பொழுது 10 மடங்கு அதிகமாக இக் குற்றச்செயல்கள் பதிவாகி உள்ளதாக பொலிஸார் கவலை தெரிவித்துள்ளனர்.


கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்துவருவதாகவும், இதன் தொடர்பில் இதுவரையில் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

(மெக்சிகோ சிட்டி)

எமிலி சூறாவளி தாக்குதல் காரணமாக கேம்பச்சி சவுண்ட் பகுதியிலுள்ள பெரும்பான்மை எண்ணெய் கிணறுகளை மெக்சிகோ அரசு மூடியுள்ளது. இதனால் நாட்டின் 80 சதவீத எண்ணெய் உற்பத்தி பாதித்துள்ளது.

உலக எண்ணெய் உற்பத்தியில் மெக்சிகோ ஐந்தாம் இடமும், ஏற்றுமதியில் ஒன்பதாம் இடமும் வகிக்கிறது.

நாட்டின் தெற்கிலுள்ள கேம்பச்சி சவுண்ட் பகுதியில் ஏராளமாக எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. நாட்டின் 80 சதவீத எண்ணெய் இங்கு உற்பத்தியாகிறது. இப்பகுதியை எமிலி சூறாவளி ஞாயிறன்று நெருங்கியதால் இப்பகுதியில் 63 எண்ணெய்க் கிணறுகள் மூடப்பட்டன. இங்குள்ள கிணறுகளில் தினமும் நான்கு இலட்சத்து 80 ஆயிரம் பரல் உற்பத்தியாகிறது.



மெக்சிகோ வளைகுடா, யுகடன் பகுதியில் எண்ணெய் ஏற்றுமதி நிலையங்களும் மூடப்பட்டன. எண்ணெய்க் கிணறுகளிலும் ஏற்றுமதி நிலையங்களிலும் பணிபுரியும் 15 ஆயிரம் ஊழியர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மெக்சிகோ எண்ணெய் நிறுவனமான 'பெமெக்ஸ்'சுக்கு சூறாவளியால் இதுபோல் அடிக்கடி சோதனை ஏற்படுவது உண்டு.

கடந்த ஆண்டு 'இவான் சூறாவளி' தாக்கியபோது, எண்ணெய் கிணறுகள் ஒருமாதம் மூடப்பட்டு இருந்தன. இதனால் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தது.

தற்போது எமிலி சூறாவளியால் எண்ணெய்க் கிணறுகள் எத்தனை நாட்கள் மூடப்பட்டிருக்கும், சூறாவளி பாதிப்பு எவ்வளவு என்பதை 'பெமெக்ஸ்' இனிமேல்தான் கணக்கிட உள்ளது.

(ற)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 8

பி.ஜே.ராஜய்யா

## ராணுவத்தில் சேருவேன்

முதல்மணி இன்னும் அடிக்கவில்லை. வாத்தியார் வரவில்லை. வகுப்பு ஆரம்பமாக வில்லை... சீக்கிரமாய் பள்ளிக்கு வந்துவிட்ட பிள்ளைகள் ஆட்டமும் அரட்டையுமாய் கும்பாள மடித்துக்கொண்டிருந்தார்கள். சதாமுமம அவன் நண்பர்களும் வட்டமாய் உட்கார்ந் திருந்தார்கள்.




17வயது சதாம்

...அது திக்ரிட் நகரத்துப் பள்ளியல்ல; பாத்தாத் பள்ளி இல்-கார்க்-பள்ளி என்பது அதன் பெயர் 1955இல் சதாமுக்கு 18 வயது ஆகும் போது கைலுல்லா மாமா மீண்டும் பாத்தாத் தில் குடியேறினார். அரசியல் மையம் கொண்டி ருக்கும் இத்தலைநகருக்கு அவர் வருகையில் கையோடு சதாமையும் அழைத்து வந்து அவன் படிப்பை தொடர்வதற்கு வசதியாக இந்த இல் கார்க் பள்ளியில் சேர்த்துவிட்டிருந்தார்.

"பெரிய ஆளாய் வளர்ந்தபிறகு என்ன வேலைக்குப் போவது?" என்பது பற்றி சதாமும் நண்பர்களும் விளையாட்டாக பேசிக்கொண்டி ருந்தார்கள்... "நான் டாக்டராவேன் என்றான் ஒருவன் என்றான் ஒருவன். "எங்கப்பா இஞ்சினியர் அவர் மாதிரி நானும் இஞ்சினியர் ஆவேன்" என்றான் இன்னொருவன். "நான் வேலைக்கெல்லாம் போகமாட்டேம்பா. எங்க தோட்டத்துல விவசாயம் பார்ப்பேன்" என் றான் மூன்றாம் அவன். சதாம் மௌனமாக இருந்தான்.

"டேய்...சதாம்.... நீ ?" சதாம் முகம் சட்டென மாறியது. இறுகியது. அழுத்தமாய் சொன்னான் "நான் ராணுவத்துல சேர்ந்து அதிகாரியாவேன். துப்பாக்கி பிடிப்பேன்"

நண்பர்கள் திடுக்கிட்டார்கள். ஐயையோ,ஏண்டா உன் புத்தி இப்பிடி போகுது? வேணாம்டா. சண்டை போடணும் .சுடுபட்டு சாகணும்"

"யார் என்ன சொன்னாலும் கேக்க மாட்டேன் நான் முடிவு பண்ணிட்டேன் சுட்டுக் கொல்லணும்"

" யாரை....?"

"நம்ம ராஜாவையும்,பிரதம மந்திரியையும்...?"

நண்பர்கள் வாயடைத்துப் போனார்கள்.

சதாம் எங்கோ பார்த்தபடி ஏதோ சிந்தனையில் சொன்னான்; "எங்க மாமா அதை செய்யாம விட்டுட்டார் நான் செய்வேன்...!"

திகைப்பிலிருந்து விடுபட்டு நண்பன் கேட்டான் "உன் வாத்தியார் மாமாவா?"

"ஆமா,அவர் வாத்தியார் வேலைக்கு வர்றதுக்கு முன் இராணுவத்துல அதிகாரியா இருநதார், வெள்ளக்காரன் காலை நக்கி அவனுக்கு ஏஜெண்டு வேலை பார்க்குற நம்ம ராஜா வம்சத்தையும் பிரதம மந்திரி நூரிசேத்தையும் அவருக்குப் பிடிக்காது அவரை மாதிரி அவங்களைப் பிடிக்காத ராணுவ அதிகாரிங்க அப்ப நிறையப் பேர் இருந்தார்களாம் அவஙக எல்லாருமா சேர்ந்து ரகசியமா கூடிப் பேசி "ராணுவப் புரட்சி" பண்ண முடிவு செஞ சாங்களாம். 1941 இல் ரெண்டாவது உலகப் போர் நடநதப்பா சண்டையோட சண்டையாய் இவங்க புரட்சி பண்ணி,அரண்மனையை பிடிச்சுக்கிட்டாங்க உடனே ராஜா குடுமபமும, பிரதமரும் கையெடுத்து கும்பிட்டு.எங்களை உயிரோட விட்டுடுங்க நாங்க வேற நாட்டுக்கு ஓடிப்போறோம்"னு கெஞ்சினாங்களாம் இவர்களும் இரக்கப்பட்டு, அவங்களை"

உயிரோட வெளிநாட்டுக்கு வெரட்டியடிச்சிட்டு,ரஷூத் அலிங்கற ஒருத்தரை நம்ம நாட்டோட அதிபரா அறிவிச்சிட்டாங்களாம் .

"இதை பாத்துட்டு வெள்ளக்காரன் சும்மா இருப்பானா? திபுதிபுன்னு நம்ம நாட்டு மேல படையெடுத்து வந்துட்டான் எங்க மாமா மாதிரி புரட்சி அதிகாரிகளுக்கும், வெள்ளக் காரனோட ராணுவத்துக்கும் பயங்கர சண்டை நடந்துச்சாம். கடைசியில் புரட்சிக் காரங்களால் தாக்குப்பிடிக்க முடியல ரஷூத் அலி நாட்டை விட்டே ஓடிட்டார். சண்டையில் ஜெயிச்ச வெள்ளக்காரன் மறுபடியும் தன் கைக் கூலிகளான ராஜ குடும்பத்தையும் நூரி சேத்தையும கூட்டிட்டு வந்து ஆட்சியில் உட்கார வச்சுட்டான் . அந்த வெள்ளக்கார ஏஜெண்டு கள் எங்க மாமாவையும் மத்த அதிகாரிகளையும் பிடிச்சு ஜெயில்ல போட்டுட்டாங்க.

"புரட்சி பண்ணினவுடனே அந்த ஏஜெண்டுகள் மேல் இரக்கம் காட்டாமல் சுட்டுக்கொன்னு போட்டிருந்தா, இப்படி அவங்க ஆட்சிக்கு வந்திருப்பாங்க நீங்க வேணும்னாலும் பாருங்க. நான் படிச்சு முடிச்சிட்டு எங்க மாமா மாதிரி ராணு வத் துல சேரப் போறேன் அவர் செய்யாம விட்டதை நான் செஞ்சு முடிப்பேன் இது என் லட்சியம்!"

சதாமின் குரலில் உறுதி இருந்தது.

ராணுவத்தில் சேர வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வலுப்பட்டாதே தவிர குறையவே இல்லை. பள்ளிப் படிப்பை முடித்தான் சதாம் மேலே படிக்க விருப்பம் இல்லை.

ராணுவ பயிற்சிப் பள்ளியில் சேர விண்ணப்பம் எழுதிப் போட்டான்.

அழைப்பு வருமென்று காத்திருந்தான் இரவில் தூங்கும்போது கூட ராணவ சீருடையும் ,துப்பாக்கியும் அவன் கனவில் வந்து அலைக்கழித்தன.

ஆனால் சதாமின் எண்ணம் ஈடேறவில்லை.

ராணுவ பயிற்சிப் பள்ளியில் சேர போதிய மதிப்பெண்கள் வாங்காததால் உனக்கு அட்மிஷன் இல்லை" என்று பதில் வந்தது.சதாமுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் வருத் தத்தையும் வார்த்தையில் சொல்ல முடியாது. "ராணுவத்தில் சேர எனக்கு தகுதி இல் லையா? ராணுவத்துக்கான தகுதி மன தைரியத்தில் இருக்கா? மார்க்கில் இருக்கா? நாளைக்கு நான் ராணுவத்தளபதி ஆகி "பீல்டு மார்ஷல்ங்கிற பட்டத்தோட போர்களை நடத்தினா அப்ப இவங்க முகத்தை எங்கே கொண்டுபோய் வச்சுக்குவங்க?" ஆவேசப் பட்டான். பொருமினான்.

அதுக்குப் பிறகுதான் உண்மையான காரணம் தெரிந்தது. மன்னராட்சியை கவிழ்க்க ராணுவப் புரட்சி செய்த கைருல்லாவின் உறவினன் என்ற கரும்புள்ளி கதாமின் மீது இருந் ததால்தான் அவனுக்கு ராணுவப் பள்ளியில் இடம் மறுக்கப்பட்டது. ராணுவத்தில் சேர முயன்று தோற்ற போதிலும் வெள்ளைக்காரர்களின் ஏஜெண்டுகளான -அரேபியர்களின் விரோதி களான ஈராக் ஆட்சியாளர்களை அழிக்க வேண்டும் என்ற லட்சியத்தை சதாம் கைவிடத் தயாராக இல்லை. லட்சியம் நிறைவேற மாற்றுவழி என்ன என்று தேடினான். அவன் தேடிய மாற்றுவழி மாமாவின் வீட்டுக்குள்ளேயே இருந்தது.

(தொடரும்)

# அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மறைந்த இலக்கியவாதிகளுக்கு அஞ்சலி செய்யும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தமிழ் எழுத் தாளர் ஒன்றிய மண்டபத்தில் யோசப்பாலா தலைமையில் நடாத்தப் படவுள்ளது.

இந்நிகழ்வில் மறைந்த இலக்கிய வாதிகளாக கலைப்பேரரசுகளான ஏ.ரி பொன்னுத்துரை, நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன், வண்ணை சே.சிவராஜா, புலோலியூர் க.சதாசிவம் ஆகியோருக்கு செங்கையாழியா னும் தில்லைச்சிவன் மற்றும் புத்தொலி ஆகியோருக்கு வரதரும், நாட்டுப் பற்றாளர் மற்றும் நந்தி ஆகியோருக்கு கலாநிதி செ. திருநாவுக்கரசுவும், கே.கணேஷ் மற்றும் ராஜசிறிகாந்தன் ஆகியோருக்கு க. தணிகாசலமும், கே. வி.நடராஜனுக்கு சொ.சிவபாலனும் அஞ்சலி உரைகளை வழங்குவார் கள்.

(க-7)

# இந்திய மீனவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(மன்னார்)

இலங்கைக்கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் சிலரை இலங்கைக் கடற்படையினர் கடந்த ஞாயிற் றுக்கிழமை திருப்பி அனுப்பியுள்ளனர்.

நெடுந்தீவு மற்றும் தலை மன்னார் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட கடற் பரப்பல் இந்திய மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டிருந்ததாகக் கடற்படைப் பேச்சாளர் ஜெயந்தபெரேரா தெரிவித்துள்ளார். 10 படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் 150 பேர் வரையில் இவ்வாறு மீன் பிடியில் ஈடுபட்டிருந்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படை அதி காரிகளே இவர்களைத திருப்பியனுப்பியதாகத தெரிவித்துள்ளார். (அ-9)

# பொதுக்கட்டமைப்புக்கு தடை; கண்காணிப்புக்குழு கவலை!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு இலங்கை தலைமை நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக்குழு கவலை தெரிவித்துள்ளது.

போா நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலட்ஸ் டொபடிர் இது குறித்துக்கூறுகையில் பொதுக்கட்டமைப்பு கையெழுத்திட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான நம்பிக்கையை வளர்த்தெடுகக இது உதவும் என்று கூறியிருந்தோம். ஆனால் நீதிமன்றத்தின இந்தத் தடையால் இரு தரப்பினரிடையே எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்றார்.

இந்நிலையில் நீதிமன்றம் விதித்துள்ள தடை குறித்து கருத்துத் தெரி விதத இலங்கை அரச சமாதானச் செயலகத்தில் ஒருங்கிணைப்பாளர் சர்மினி சேரசிங்க, குறிப்பிட்ட சில பிரிவுகளுக்குத்தான் தற்போது தடை விதிக் கப்பட்டுள்ளது. இது பொதுக்கட்டமைப்பை முழுமையாக பாதிக்காது அரச தரப் பிலான விளக்கத்தை எதிர்வரும் 29ஆம் திகதியன்று தலைமை நீதி மன்றத தில் தாக்கல் செய்யவுள்ளோம் என்றார்.

(க)

# சமாதான நீதிவான் பதவியை பயன்படுத்தி பலர் பணம் கறப்பு!

(கொழும்பு)

சமூகசேவையில் ஈடுபடுவதற்கென வழங்கப்பட்ட [illegible] சமாதான நீதி வான பதவியைப் பயன்படுத்தி பலர் பணம் பெற்று வருவதாக நீதியமைச் சுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது. என நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமாதான நீதிவான் பதவிக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போது தகுதியற்றவர்களின் பெயர்களும் முன்வைக்கப்பட்டுள்ளதாக நீதி யமைச்சர் ஜோன் செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

கௌரவ சேவைக்கென வ்ழங்கப்பட்டுள்ள இந்தப்பதவியில் உள்ளவர் கள் ஆவணங்களில் கையெப்பம் இடுவதற்காக 500 ரூபா வரை அறவிட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி குறித்த சமாதான நீதிவான்கள் தொடர்பாக பொலிஸாரும் பிரதேச செயலகங்களும் விசாரணைகளை மேற கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சிறைக்கைதிகள் ஒழுக்கக்கேடான முறையில் நடந்து கொள ளும போது அவர்களுக்கு கடூழியத் தண்டனையை வழங்க நீதியமைச்சு தீர மானித்துள்ளது.

இந்தக் கடூழியத் தண்டனையை வழங்கும் அதிகாரம் சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள் ளது.

இவ்வாறான ஒழுக்கக்கேடான முறையில் நடந்துகொள்ளும் சிறைக் கைதிகளுக்கு 3 நாட்கள் தொடர்ச்சியாக கூண்டில் அடைத்தல், தண்டனை குறைப் புககான புள்ளிகளைக் குறைத்தல், போன்ற தண்டனைகளை வழங்க முடியும என்றும் இதற்காக சிறைச்சாலைச் சட்டமூலம் மறு சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் செனவிரத்தின மேலும் தெரிவித்துளளார். (க-9)

## பொதுக்கட்டமைப்பு அலுவலகம்

# ஜே.வி.பியின் எண்ணம் நிறைவேறியுள்ளதா பிரதி அமைச்சர் டிலான்பெரேரா கேள்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினதும் ஜே.வி.பியினதும் செயற்பாடுகள் ஒருமித்து இருப்பது குறித்து ஜே.வி.பி பதில் கூறவேண்டும் என பிரதியமைச் சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் படி அதன் காரியாலயம் ஒன்றை கிளிநொச்சியில் வைத்திருக்க முடியாது. ஆனால் இதன் மூலம் வழக்கின் மனுதாரரான ஜே.வி.பியின் நோக்கம் நிறை வேறியுள்ளதா? எனக் கேட்கவேண்டியுள்ளது.

கிளிநொச்சியில் அலுவலகத்தை அமைக்காவிட்டால் அம்பாறையில் மட்டககளப்பில் அல்லது யாரும் ஏற்றுக்கொள்ளாத தமிழீழ விடுதலைப் புலிகளால தமிழீழத்தின் தலைநகர் எனக்கூறப்படுகின்ற திருகோணமலை யில பொதுக்கட்டமைப்பின அலுவலகத்தை அமைக்க வேண்டியிருக்கும்.

இதனை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்கின்றதா? அதாவது ஜே.வி.பி தமிழீழ விடுதலைப் புலிகளின் எண்ணத்தை பிரதிபலிக்கின்றது என அவர் மேலும கேள்வியெழுப்பியுள்ளார்.

(அ-8)

அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு - குறள்

வலம்புரி

# காய்க்குள் பழம் ஓடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

ஒருமுறை யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர். அந்தச் சந்திப்பில் நீங்கள் ஜனாதிபதியானால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்? இப்படி ஒரு கேள்வியைத் தொடுத்தனர்.

நான் ஜனாதிபதியானால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேரில்சந்தித்து பேச்சு நடத்துவேன் எனக் கூறினார்.

பிரதமரின் இந்தப் பதில் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்கு மகிழ்வைக் கொடுத்தது. அதேநேரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது ஒரு வகையான மதிப்பையும், நன்மதிப்பையும் ஏற்படுத்தியது.

தலைவர் பிரபாகரனுடன் நேரில் பேச்சு நடத்தும் நினைப்போடு பிரதமர் இருக்கிறார் என்பதனாலேயே அவர் மீது நம்பிக்கை ஏற்படக் காரணமாயிற்று.

பிரதமரின் மேற்குறித்த பதிலின் மத்தியில் மற்றுமோர் கேள்வி அவர் முன்வைக்கப்பட்டது. பிரதமராக இருக்கும் தாங்கள் இனப்பிரச்சினை விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? அது விடயத்தில் உங்களின் பங்களிப்பு என்ன? என்பதே அந்தக் கேள்வியாகும்.

அதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, 'ஜனாதிபதியின் ஆட்சியில் பிரதமர் பியோனுக்கு ஒப்பானவரென காலஞ்சென்ற ஆர்.பிரேமதாசாவே கூறியுள்ளார் அல்லவா?' நானும் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்கிறேன் எனச் சிரிப்போடு கூறிக்கொண்டார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பதில் சிரிப்போடு இருந்தாலும் அதற்குள் இருக்கக்கூடிய ஆத்திரம், ஆவேசம் என்பவற்றை வெறுமனே விட்டுவிடமுடியாது.

அதாவது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் பிரதமராகிய நான் பியோனாகவே இருக்கின்றேன் என்பதே அவரின் பதிலுக்கான பொருள். அப்படியானால் பிரதமர் மகிந்தவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையேயான உறவு சுமுகமாக இல்லையென ஊகித்துக்கொள்ளலாம்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை மகிந்த ராஜபக்கஷவிற்கு பிரதமர் பதவியைக் கொடுக்கும் எண்ணம் அறவே இருக்கவில்லை. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அழுத்தம் காரணமாகப் பிரதமர் பதவியைக் கொடுக்கவேண்டியதாயிற்று.

பிரதமர் பதவியைப் பெற்றுக்கொண்ட மகிந்த, ஜனாதிபதியை எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தார். அதற்காக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்.

ஜே.வி.பியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைக்கவேண்டுமென்பதில் மிகத் தீவிரமாக இருந்தவர் ஜனாதிபதியின் சகோதரரான அனுரா பண்டாரநாயக்கவே.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடலாம் எனவும், அவ்விதம் போட்டியிட்டால், அதற்கு ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலுமே ஜே.வி.பியின் கூட்டை அனுரா வலியுறுத்தினார்.

ஆனால் அதனை முறியடிக்கும் வகையில் ஜே.வி.பியை திசை திருப்பி அவர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி தான் ஜனாதிபதியாகும் முயற்சியில் பிரதமர் மகிந்த இறங்கியுள்ளார். அவரின் இந்த காய்க்குள் பழம் ஓடும் தந்திரம் வெற்றியளிக்குமா? என்பதைக் காலமே தீர்மானிக்க வேண்டும்.

## திருமலை புத்தர் சிலை விவகாரம்;

# சுயாதீன முடிவு எடுப்பதற்கு நகரசபைக்கு உரிமையுண்டு

(கொழும்பு)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை தொடர்ந்தும் விசாரணை செய்வதில்லையென நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது .

குறித்த புத்தர் சிலையினை அகற்றுவதற்கு திருகோணமலை நகரசபைக்கு உத்தரவிடவேண்டும் எனக் கோரி சட்டமா அதிபர் திருகோணமலை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தமையானது அடிப்படை உரிமை மீறல் எனத் தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கோரி சீனன்குடா விகாரையின் பிக்கு பியதிஸ்ஸ தேரர் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் மனுதாரரின் வாதத்தை நீதியரசர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து சட்டமா அதிபர் திருகோண மலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை தாம் விளக்கிக்கொள்வதாகத்தெரிவித்தார். இந்த நிலையில் குறித்த மனுவை ரத்துச்செய்வது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இதேவேளை, நீதிமன்றில் கருத்துரைத்த பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வா, குறித்த புத்தர் சிலை விவகாரத்தில் சுயாதீன முடிவினை எடுக்க திருகோணமலை நகர சபைக்கு உரிமை இருப்பதாகக் குறிப்பிட்டார். (ரு-4)

## பிரதமரின் கணக்கில் சுனாமி நிதி;

# உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி குற்றப்புலனாய்வு திணைகளத்தில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுத்திணைக் களத்தில் மனுவொன்றினை கையளித்துள்ளனர்.

சுனாமி நிதியினை தனியார் கணக்கொன்றில் வைப்பிலிட்டதன மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுச்சொத்துக்கள் புலமைச்சட்டத்தின் கீழ் அவ நம்பிக்கையினை ஏற்படுத்தியிருபபதாக அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கபீர்காஸீன் இந்த முறைப்பாடுகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது முன்னணி அமைச்சர்களான மஹிந்த விஜய சேகர காமினிலொக்குகே சி.பி தயாரத்ன ஜோன் அமரதுங்க முன்னால் சபாநாயகர் சோசப்மைக்கல் பெரேரா ஆகியோர் சமுகமளித்திருந்தனர். சுனாமி நிதியாகக் கிடைத்த 829 இலட்ச ரூபாவினை தனது தனிப்பட்ட கணக்கில் பிரதமர் வைப்பிலிட்டுள்ளதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதிச்சட்டங்களை மீறுவதாகக் கூறும் ஐக்கிய தேசியக கட்சி இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நடாத்தப்படவேண்டும் என குற்றப்புலனாய்வுத் திணைக்களத் திடம் கோரிக்கைவிடுத்துள்ளது. (ரு-4)

# சேது கால்வாய் போக்குவரத்து 2008 நவம்பரில் ஆரம்பம்

(சென்னை)

சேது சமுத்திர கால்வாய்ப் போக்குவரத்து நவம்பர் 2008ஆம ஆண்டு ஆரம்பமாகும் என்று சேது சமுத்திர கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சேது சமுத்திர கால்வாய் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,சேதுசமுத்திரம்கால்வாய்த்திட்டம் இரண்டாயிரத்து 427 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது.

இநத திட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அட்டவணை மற்றும் செலவின இலக்குகள் முறையாக நிறைவேறறப்படுகிறதா என்பதை மத்திய கப்பல்சாலை போக்குவரத்து மற்றும நெடுஞ்சாலை துறை அமைச்சர் டி.ஆர்.பாலு நேரடியாக காண்காணிப்பார்.

சேது சமுத்திரத் திட்டத்தின செயலாக்கத்தைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகததில் உயர் நிலை கண்காணிப்புகட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு கடந்த மே 19ஆம் திகதி இரண்டாயிரத்து 427கோடி முதலீட்டிலான சேது சமுத்திரக் கால்வாய்த்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது.

பாக் நீரிணைப்பகுதியில் 13.57 கி.மீ நீளத்திற்கு கடலுக்குள் கால்வாய் தோண்டும் பணியை பொதுத்துறை நிறுவனமான இநதிய அகழ்வுப்பணி கழகம் தற்போது மேற்கொண்டுளளது. ஒரு கோடியே 36 இலட்சம் கன மீற்றர் அளவிற்கு இப் பகுதியில் அகழ்வுப்பணி கழகம் மேற்கொண்டுள்ள கால்வாய் தோண்டும் பணிகள் இரண்டு ஆண்டுக்குள் நிறைவடையும் இராமேஸ்வரம் அருகே ஆதம் பாலம் பகுதியில் 35 கிலோ மீற்றர் நீளத்திற்கும் பாக்நீரிணைப்பகுதியில் மொத்தம் 40.68 கி.மீ நளத்திற்கும் மேற்கொள்ளப்படவேண்டிய 3 கால்வாய் அகழ்வுப்பணிகளுக்கு சர்வதேச அளவில் இம்மாதம் 9ஆம் திகதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மொத்தம் 6 கோடியே 90 இலட்சம் கன மீற்றர் அளவிற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளி நடவடிக்கைகள் அடுத்த மாதம் 31ஆம் திகதி முடிவடையும் அதன் பின் இப் பகுதிகளில் கால்வாய் தோண்டும் பணிகள் வரும் நவம்பர் மாதம் தொடங்கும்.

சேது சமுத்திரக்கால்வாயின் மொத்த நீளமான 167 கிலோ மீற்றர் பாக் வலைகுடாப பகுதியில் அமைந்துள்ள 78 கிலோ மீறறர் நீளத்திற்கு எவ்வித அகழ்வுப்பணியும் மேற்கொள்ளபபடமாட்டாது இவ்வாறு சேது சமுத்திரக் கழகம் தெரிவித்துள்ளது.

★ அகழ்வுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நடவடிக் கைகள்- ஆக 31,2005.

★ அகழ்வுப்பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்குதல் -செப் 2005.

★ அகழ்வுப்பணிகளுக்கு முந்தைய ஆய்வும், அகழ்வுக் கப்பல்கள் வருகையும்-நவ 2005

★ ஆதம்பாலம், பாக்நீரிணைப்பகுதிகளில் அகழ்வுப் பணிகள் துவக்கம்- நவ 2005

★ கரையில் உருவாக்கப்படவிருக்கும் வசதிகளுக்கான வரைபடங்கள், ஒப்பந்தப்புள்ளிகள் உருவாக்குதல்- நவ 2005

★ கால்வாய்கான கடல்பயண சாதனங்கள் மற்றும் வழிகாட்டி படகுகள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் உருவாக்குதல்- பெ.ப 2006.

★ கடல் பயணசாதனங்கள்,வழிகாட்டி படகுகள் கரையில் அமைக்கபபடும் வசதிகளுக்கான ஒப்பந்த புள்ளி நடவடிக்கைகள் -மே 2006.

★ கரையில் உருவாக்கப்படும் வசதிகளுக்கான ஒப்பந்தம் வழங்குதல்-ஜூன் 2006.

★ கடல் பயண சாதனங்கள் மற்றும் வழிகாட்டி படகுகள் கொள்முதல் நிறைவேற்றம்-மார்ச் 2008.

★ சேவைத்துறைகள் பயண வழிகாட்டி கோபுரங்கள் அமைத்தல்- ஜூன் 2008.

★ கால்வாய் அகழ்வுப்பணி நிறைவடைதல்-யூலை 2008.

★ அகழ்வுப் பணிகளுக்கு பிந்தைய கால்வாய் ஆய்வுப் பணி- ஆக 2008.

★ கப்பல் போக்குவரத்து கண்காணிப்பு கட்டமைப்பு நிறுவுதல்-ஆக 2008.

★ கப்பல் போக்குவரத்து சோதனை ஓட்டம்- செப் 2008.

★ சேது சமுத்திர கால்வாயில் போக்குவரத்து ஆரம்பம்- நவ- 2008. (ரு)

# களுத்துறை நீதிபதியினால் ஊழியர்களுக்கு இடையூறு

(கொழும்பு)

களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதியினால் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற வளாகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றிணை இவர்கள் நடாத்தினார்கள்.

கடந்த 14ஆம் திகதி இந்த மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிமன்ற ஊழியர்களையும் காவலாளர்களையும் தாக்கியதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த விடயம் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்று உயர் நீதிமன்ற நீதியரசிடமும்,பொலிஸ்மா அதிபரிடமும் ஊழியர்கள் கேட்டுள்ளார்கள். (க-9)



# திைசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

"உலகத்திற்கு இதனால் என்ன நன்மை?" என்று அசட்டுத்தனமாகக் கேள்வியைக் கேட்காதே. உலகத்தைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். அன்பாக இரு. எதையும் விரும்பிக்கேளாதே. அன்பாய் இரு. பிரதி பலன் எதையும் எதிர்பாராதே அன்புசெய். நான், எனது என்னும் எண்ணங்களை விட்டுவிடு. உலகில் தனக்கென எதுவும் இல்லாதவனை நாடியே இறைவன் வருகிறார்.

சுவாமி விவேகானந்தர்

# காஸ் சிலிண்டரில் தீபற்றியதில் வயோதிப மாது பரிதாப மரணம்

## கொழும்புத்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறையில் காஸ்சிலிண்டர் வெடித்ததில் வயோதிபமாது ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காமையினால் அங்கு மரணமானார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நேற்று முன்தினம் அதிகாலை குறிப்பிட்ட மாது கண்விழித்தபோது காஸ் சிலிண்டரிலிருந்து வெளியேறிய மணத்தை நுகர்ந்துள்ளார். உடனடியாகச் சமையலறைக்குச் சென்று லைற்றைப் போட்டபோது காஸ் பற்றி எரிந்தது. இதில் அவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் நேற்று வைத்தியசாலையில் சிகிச்சை பயனளிக்காமையால் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தின்போது அதே இடத்தைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் (வயது 60) என்பவரே மரணமானவராவார். (ச)

# கல்வி மாநாடு

(யாழ்ப்பாணம்)

'கல்வி ஒரு பன்முகப்பார்வை' எனும் தலைப்பில் தமிழர்களின் கல்விப் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் வளர்ச்சி, மேம்பாடு பற்றிய கல்வி மாநாடு நாளை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாடு காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டை 'அகவிழியும்', கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் இணைந்து மேற்கொள்கின்றன. (ச)

# ஓயாத அலைகள்-1 வெற்றியின் 9ம் ஆண்டு நிறைவு விழா முல்லையில்

(கிளிநொச்சி)

ஓயாத அலைகள்-1 வெற்றியின் 9ம் ஆண்டு நிறைவுவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு நகரில் நடைபெற்றது.

முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தலைவர் மனோ தலைமையில் காலை 9.30மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரினை முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.மரியராசா ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றிவைத்தார். ஓயாத அலைகள் - 1 வெற்றித்தாக்குதல் நினைவாக நிறுவப்பட்ட நினைவுக்கல்லுக்கான மலர் மாலையினை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஓயாத அலைகள் - 1 தாக்குதலில் வீரச்சாவதைத் தழுவிக்கொண்ட 315 மாவீரர்களின் நினைவாக திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கனியவன், கனியவள் ஆகிய மாவீரர்களின் தாயாரான அன்னலட்சுமி ஏற்றிவைத்து மலர்மாலையினையும் அணிவித்தார். (ச)

# பொதுக் கட்டமைப்பு விவாதம் அடுத்தமாதம் பாராளுமன்றில்

(கொழும்பு)

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக பாராளுமன்றில் 2 நாள் விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது.

பாராளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் இணைந்து இம்முடிவினை எடுத்துள்ளனர். அடுத்த மாதம் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் பொதுக் கட்டமைப்பு விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பாராளுமன்றில் விவாதம் ஒன்றினை நடத்துமாறு ஜே.வி.பி கோரியிருந்தமையும், அதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-8)

## ஜனாதிபதித்....

மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கையெழுத்துப்பெறும் நடவடிக்கை ஓகஸ்ட் மாத இறுதியில் நிறைவுசெய்யப்படும். இது தவிர ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டிய காலம் குறித்து மாவட்ட மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கட்சி தீர்மானித்துள்ளது.

கையெழுத்துப்பெறும் நடவடிக்கைகளையும், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களையும் ஓகஸ்ட் மாதத்தில் மேற்கொள்வதென்றும் அதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான திகதி அறிவிக்கப்படாவிடின் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதென்றும் கட்சி தீர்மானித்துள்ளது. (4)

## ஜனாதிபதி பதவியேற்ற...

வில்லை. இதனால் ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்தமைக்கான எந்தவொரு சாட்சியங்களும் இல்லை.

இந்நிலையில் ஜனாதிபதியாக அடுத்த வருடமும் சந்திரிகா இருக்கமுடியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இவ்வருடம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள வாதம்தான் 2000ம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதி அவர் இரண்டாவது தடைவையாகவும் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார் என்பதாகும். எனினும் 2000ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதிக்கு முன்னதாக கட்டாயமாக அவர் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டியிருந்தது.

இந்த சத்தியப்பிரமாணம் தொடர்பாக எந்தவொரு சாட்சியமும் இல்லை. இது தொடர்பில் பலத்த சந்தேகம் நிலவுவதாகவும் பீரிஸ் சுட்டிக் காட்டினார்.

சந்திரிகாவுக்கு முன்னதாக சேவையாற்றிய ஜனாதிபதிகள் அனைவரும் சத்தியப்பிரமாண அறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தகமானி அறிவித்தல் யாவும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உள்ளது.

2000ஆம் ஆண்டு ஜனாதிபதியாக சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்துகொண்டமைக்கான வர்த்தகமானி அறிவித்தல் தம்மிடம் இல்லை எனவும், அவ்வாறு வெளியிடப்பட்டிருந்தால் ஐக்கிய தேசியக்கட்சியிடம் அது இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள போர்நிறுத்த உடன்பாட்டை பாதுகாக்க அரசு தவறிவிட்டது. போர்நிறுத்தம் தொடர்பில் அரசிடம் எந்தவொரு கொள்கையும் இல்லாதபடியால் மிகவும் மோசமான ஒரு நிலைமை வடகிழக்கில் குறிப்பாக திருகோணமலையில் ஏற்பட்டுள்ளது.

டோக்கியோ மாநாட்டில் இணைத்தலைவர்கள் என்ற ரீதியில் நான்கு நாடுகள் அரசுடனும் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி கருத்துவெளியிட்டுள்ளன.

போர்நிறுத்தத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி முழுஅளவிலான ஒத்துழைப்பினை வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# கொரியத் தூதுவர் நேற்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யங் ரேகண் மற்றும் கொரிய நாட்டைசேர்ந்த பொறியியலாளர் பேராசிரியர் ஜிங்கூகிம், சேகச்கிம், ஜொங் கக்கூ, கம் வைக் பாக் ஆகிய ஐந்துபேர் அடங்கிய குழுவினர் நேற்று மாலை யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வந்துள்ளனர்.

இக்குழுவினர் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று கொரிய அரசின் உதவியுடன் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

நேற்று மாலை பலாலி விமான நிலையத்திற்கு வந்த அக்குழுவினரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் வரவேற்றார். பின்னர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள், துறைசார் நிபுணர்கள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

இதேவேளை கொரியாவில் இருந்து வருகைதந்த பொறியியலாளர் குழு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்களுடன் இணைந்து இன்றுமுதல் ஆரம்பகட்ட வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விப்யிலும் 17 மாணவர்களுக்கு கொரியநாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியால் 5000 ரூபா பணமும், சான்றிதழும் நேற்று வழங்கப்பட்டது. (ச-19)

## அரசிற்கு....

மொழி வழங்கியுள்ளார்.

இதேவேளை இ.தொ.கா. தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெறும் சந்திப்புக்கள் தொடர்பில் இ.தொ.காவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்திக்குள்ளாகியிருக்கின்றனர்.

ஜனாதிபதியுடன் பேச்சுக்களின் கலந்துகொள்ள வருமாறு கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களை கொழும்புக்கு அழைத்திருந்த கட்சித்தலைமை, பின்னர் அவர்களை காத்திருக்க விட்டுவிட்டு தனியே சென்று ஜனாதிபதியுடன் பேச்சுநடத்தியமையே இந்த அதி ருப்திக்கு காரணம் என்று தெரிய வருகிறது. (ச-4)

## போக்குவரத்...

படையினர் போக்குவரத்திற்கு தடைவிதித்துள்ளதால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிப்புற்றதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச)

## இலஞ்ச ஊழல்:...

அவரை நிரபராதி என தீர்ப்பளித்து இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்ததாக நீதிபதி அறிவித்தார்.

தீர்ப்பை வாசித்த நீதிவான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாட்டினை கடுமையாக விமர்சித்தார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அனைத்து தரப்பிடமும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் அனைத்துத் தரப்பில் இருப்பவர்களையும் ஒரேநேரத்தில் அணுகவேண்டும் எனவும் குறிப்பிட்ட நீதிபதி சந்தேக நபர்கள் நிரபராதிகள் எனத்தீர்ப்பளித்து விடுதலை செய்தார்.

குற்றச்சாட்டிற்கு இலக்கானவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தினை அதன்மூலம் நிவர்த்தி செய்ய முடியாதெனவும் தெரிவித்தார். (ச-2,4)

## விடுதலைப் புலிகளின்...

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளும் அரசும் தற்போதைய பதற்றநிலையைத் தணிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அரசு, தங்களுடைய இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் குழுக்கள் மற்றும் துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

பெப்ரவரி 2005இலிருந்து அரசதரப்பிலிருந்தும், விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும், பொதுமக்கள் மற்றும் ஏனைய கட்சி அங்கத்தவர்களிலிருந்தும் பலர் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் வருகிறார்கள்.

இது தற்போது நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இது தொடரும் பட்சத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிந்துபோகவும், இதனால் நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்பு அகன்றுபோகவும் சந்தர்ப்பங்கள் உருவாகிவருவதால் நாட்டின் பாதுகாப்பை அனைத்துத் தரப்பும் இணைந்து பேணுவது ஒரு கட்டாய தேவையாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் எல்லா விதமான தாக்குதல், சூட்டுச் சம்பவங்கள் அனைத்தையும் உடனடியாக நிறுத்துவது அவசியம்.

அரசு யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி தனது செயற்பாடுகளை நெறிப்படுத்துவது அவசியமாகும். யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையின்படி தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசின் கீழ் அல்லது தனியாக இயங்கும் அனைத்து துணைப்படைகளின் செயற்பாட்டை நிறுத்தி, அவர்களின் ஆயுதங்களை உடனடியாகக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரு பகுதியினரும் அதை சரியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது அவர்களது கட்டாயக் கடமையாகவுள்ளது. இந்தக் கடமையை சரியாக மேற்கொள்ளும் வகையில் சர்வதேச அளவில் கண்காணிப்புக்குழுவொன்று அங்கு கடமையில் உள்ளது.

கைச்சாத்திட்ட இருபகுதியினரும் தமது பொறுப்பை உணர்ந்து சரியாகச் செயற்பாட்டால் மட்டுமே கண்காணிப்புக்குழுவும் தனது கடமையைச் செய்யமுடியும். எனவே தொடர்ந்தும் சமாதானத்தை பேணுவதற்கு ஏதுவாகவும், நிதிமாநாட்டின் பிரதான ஒருங்கிணைப்பு நாடுகளின் உதவியையும் கண்காணிப்பையும் தொடர்ந்தும் பெற்றுக்கொள்வதற்கு அனுகூலமாகவும், இரு பகுதியினரும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கும்படி அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-4)


பதவி வெற்றிடம்

* கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பெண்கள் பகல் கடமை)

வலம்புரி நிறுவனத்திற்கு கேிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3.30மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
முரளி, நாசர், பிரதியுக்ஷா
மனுநீதி
கா.நே: 11.00, 2.45, 6.00
22.07.2005
சந்திரமுகி

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
15.07.2005 முதல்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும் அடிதடி காதல் காவியம்

கா.நே:10.30,2.30,6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
4வது வெற்றி வாரம்
சியான் விக்கிரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே:10.30, 2.30, 6.30, 9.30
20 ஆம் திகதிவரை
22.7.05 முதல் அதிரடி வெளியீடு இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதினத்தில்
மாதவன், சதா, கோவை சரளா நடித்த
பிரியசகி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.